Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி என் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது மாசி3 ஆம் நாள் றம்ழான் பிறை 19 (15-2-63) வெள்ளிக்கிழமை இதழ் 7

யாம்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்ட ஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45, மெயின் வீதி, : யாழ்ப்பாணம்

# சீனியின் விலை உயர்வு!

## யாழ்ப்பாணத்தில் றாத்தலுக்கு புதிய விலை $69\frac{1}{2}$ சதம்

### உலக மார்க்கெட் விலை இரட்டிப்பானதின் விளைவு

கொழும்பு, வெள்ளி

சீனியின் விலை சமீப மாதங்களில் உலக மார்க்கெட்டில் இரண்டு மடங்காக அதிகரித்திருப்பதால், நேற்று நள்ளிரவு முதல் அரசாங்கம் பாவனையாளர்களுக்கான சீனி விலையை உயர்த்தியிருக்கிறது. பாவனையாளர்கள் றாத்தலுக்கு 4 சதம் அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கும். இதன்படி யாழ்ப்பாண நகரில் சீனியின் விலை றாத்தல் ஒன்றுக்கு 65 [illegible]த்திலிருந்து 69 1/2 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதர இடங்களில் சீனியின் விலை பின்வருமாறு:-

திருக்கோணமலை $68\frac{1}{2}$ சதம். வவுனியா $68\frac{1}{2}$ சதம். மட்டக்களப்பு 69 சதம். மன்னர் 69 சதம். அம்பாறை 65 1/2 சதம். கொழும்பு 67 சதம். களுத்துறை 67 1/2 சதம். கேகாலை 67 1/2 சதம். குருநாக்கல் 67 1/2 சதம். இரத்தினபுரி 68 சதம். கண்டி 68 சதம். காலி 68 சதம். புத்தளம் 68 சதம். மாத்தளை 68 சதம். மாத்தறை 68 சதம். நுவரேலியா 68 சதம். அனுராதபுரம் 68 சதம். பொலன்னறுவை 68 1/2 சதம். அம்பாந்தோட்டை 68 1/2 சதம். பதுளை 68 1/2 சதம். மொனராகலை 68 1/2 சதம்.

## எதிரிக்கு விடுதலை; சாட்சிக்கு சிறை

### உரும்பராய் கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நான்காவது வழக்காக உரும்பிராய் கொலைவழக்கு நேற்று நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொய்ச்சாட்சியம் அளித்ததற்காக சின்னவி நன்னித்தம்பிக்கு 3 மாதம் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டு, எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் திகதி யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உரும்பிராய் சந்திக்கு அருகே கதிரவேலு கந்தசாமி என்பவர், கட்டையன் வைத்தி என்பவனை குற்றிக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

எதிரியின் சார்பில் திரு. வீ. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கமும், திரு. சரவணமுத்து ஆகியோர் ஆஜரானார்கள். எதிரியின் சார்பில் அரசாங்கத்தால் திரு. வீ. நடராசா நியமிக்கப்பட்டிருந்தார்.

காலஞ்சென்ற வைத்தியின் மருமகனை சின்னவி நன்னித்தம்பி சாட்சியமளித்தபோது கூறியதாவது:

"சம்பவம்நடைபெற்ற அன்று காலை 10 மணிக்கு இணுவில் ஆஸ்பத்திரிக்கு நான் போனேன். மத்தியானம் அங்கிருந்து வீட்டிற்குப் புறப்பட்டேன். நான் சைக்கிளில் வந்துகொண்டிருக்கும் போது சத்தம் கேட்டது. நான் சயிக்கிளிலிருந்து இறங்கியதும் எதிரி எனது மாமனை ஒரு தரம் குத்தியதைக் கண்டேன். அதன் பின் நான் வீட்டிற்குப் போய் திரும்பி வரும்போது, சம்பவம் நடந்த இடத்தில் சர்ஜன் வீரபாகுவும், சனங்களும் இருந்தார்கள். நான் வீரபாகுவிடம் நடந்தவற்றை சொன்னேன். அவர் எனது வாக்கு

(8-ம் பக்கம்பார்க்க)

## வட்டார விஸ்தரிப்பு சமஷ்டிக் கட்சி எதிர்ப்பு

### பிரதமருடன் நல்லூர் எம். பி. தொடர்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாணம் மாநகரசபை 17 வட்டாரங்களாகப் பிரிக்கப்படும் என்று ஸ்தலஸ்தாபன அமைச்சு அறிவித்திருப்பதனை இலங்கை தமிழ்அரசுக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.**

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீர்மானங்களுக்கு முரணாக ஸ்தல ஸ்தாபனக் கமிஷன் அறிக்கை விட்டிருப்பதனை தமிழரசுப் பிரமுகர்கள் கண்டித்துள்ளனர். மாநகரசபை 21 வட்டாரங்களாகப் பிரிக்கப்படும்வரை தொடர்ந்து போராடவும் தமிழரசுக் கட்சி முடிவு செய்துள்ளது.

ஸ்தலஸ்தாபன அமைச்சரின் முடிவை ஆட்சேபித்து நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம் வி. நாகநாதன் கொழும்பிலுள்ள ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகத் தெரிகிறது. டாக்டர் நாகநாதனிடம் இது விஷயம்பற்றிப் புனராலோசனை நடத்துவதாக அந்த அதிகாரிகள் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

டாக்டர் நாகநாதன் ஸ்தல ஸ்தாபன அமைச்சின் முடிவு பற்றி பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு டெலிபோன் மூலம் கருத்துத் தெரிவித்துள்ளார். பிரதம மந்திரி இதுபற்றி பரிசீலனை செய்து விரைவில் முடிவு தெரிவிப்பதாகக் கூறியிருப்பதாகவும் தெரிகிறது.

ஸ்தலஸ்தாபனக் கமிஷனின் அநீதியான முடிவை பொது மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக விரைவில் பொதுக் கூட்டமொன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட விருக்கிறது.

வட்டாரப் பிரிவினை சம்பந்தமாக யாழ்ப்பாணம் முன்னள் மேயர் திரு. டி. எஸ். துரைராஜாவும் செனட்டர் ஜி. நல்லையாவும் கொழும்பு சென்றுள்ளனர் என்று தெரிகிறது.

மாநகரசபைப் பிரிவினை சம்பந்தமாக ஸ்தலஸ்தாபன அமைச்சர் செய்துள்ள முடிவு அநீதியானது என்று தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியிருக்கிறார்.

## தெல்லிப்பழை கி. ச. தலைவர் தெரிவு

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழை கிராமச் சங்கப் புதிய தலைவராகத் திரு. செல்வரத்தினம் இன்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. கு. கதிரையாண்டி ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து காலியான தலைமை ஸ்தானத்துக்கே திரு. செல்வரத்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உதவி ஸ்தாபன கமிஷனர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இத்தேர்தலில் திரு. செல்வரத்தினத்தின் பெயர்மட்டுமே பிரேரிக்கப்பட்டது. 19 அங்கத்தவர்களைக் கொண்ட இச்சபையில் 14 அங்கத்தவர்களே இன்று பிரசன்னமாயிருந்தார்கள்.

தலைமைவகித்த திரு. மாணிக்கவாசகர் தலைவர் தெரிவின் பின்னர் பேசுகையில் மற்றைய ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இத்தலைவர் தேர்தல் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

## இலங்கை அங்கீகாரம்

கொழும்பு, வியாழன்

ஈராக் புதிய அரசாங்கத்தை இலங்கை அங்கீகரித்திருக்கிறது.

## இன்று 5-ம் டெஸ்ட்

சிட்னி, பெப். 15

இன்று சிட்னியில் இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே 5-வது கிரிக்கெட் டெஸ்ட் ஆரம்பமாகும்.

## இவ்வருடம் 120 கொலைகள்

கொழும்பு, வியாழன்

இலங்கையில் இம்மாத ஆரம்பத்திலிருந்து 13 நாட்களுக்குள் 39 பலாத்கார கொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வருடத்தில் இதுவரை 120 கொலைகள் நிகழ்ந்துள்ளன.

## பஞ்சாபுக்கு முதல் ஸ்தானம்

புதுடில்லி, பெப். 14

இந்தியப் பாதுகாப்பு நிதிக்கு பஞ்சாப் ராயம்தான் அதிக உதவி செய்திருக்கிறது. நிதி ஆரம்பிக்கப்பட்ட 3 வாரத்தில் குறிக்கோளான 2 கோடி ரூபாயை பஞ்சாப் அளித்தது. இதுவரை மொத்தம் 550 லட்சம் ரூபாயும், 130 ஆயிரம் கிராம் தங்கமும் அது வழங்கியிருக்கிறது ரூ. 138 ஆயிரத்துக்கு பாதுகாப்புப் பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஊர்க் காவற்படை, சமாதானகாலத்தைவிட 10 மடங்கு அதிகமாக்கப்படவிருக்கிறது.

## மூடுபனி

புதுடில்லி, பெப். 14

பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகர்களில் கடும் மூடுபனி காரணமாக விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## டில்லியில் ஐ. நா. அதிகாரி

புதுடில்லி, பெப். 14

ஐ. நா. பிரதம உதவிக் காரியதரிசி திரு. ஸி. வி. நரசிம்மன் இன்று புதுடில்லி வந்தார். ஜனதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு. நேரு ஆகியோரை அவர் சந்தித்தார்.

## பட்டதாரி தராதரப்பத்திரங்கள்

கொழும்பு, வியாழன்

பட்டதாரிகளுக்கான தகுதிப் பத்திரங்களை வழங்குவதற்கும் இப் பட்டப் படிப்புகளில் ஒரே வித தரத்தை நிலவச்செய்யவும் பல்கலைக்கழக சின்டிகேட் ஒன்றை நிறுவ கல்வி அமைச்சு ஆலோசனை செய்துவருகிறது.

ஒரு பொதுவான புகுமுகப் பரீட்சை நடத்தவும் ஒரே மாதிரியான தராதரப்பத்திரத்தை வழங்கும் நோக்கமாகவே இவ்வித ஆலோசனை செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு, வியாழன்

சமீபகாலங்களில் மேலும் 72 தனிப்பட்ட பாடசாலைகள் அரசாங்கத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## கைத்தொழில் சுவீப்

கொழும்பு, வியாழன்

கைத்தொழில் சுவீப்பில் பரிசுபெற்ற டிக்கெட் விபரங்கள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | 10 B 0805 | ரூ. 20,000 |
| 2-ம் பரிசு | 09 D 0193 | ரூ. 10,000 |
| 3-ம் பரிசு | 042 0057 | ரூ. 5,000 |

## வரி விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள லொறிச் சாரதி தேவை. கீழ்க்கண்ட முகவரிக்கு 24-2-63க்கு முன் நற்சாட்சிப் பத்திரங்களுடன் பதிவுத் தபாலில் மனுச்செய்யவும். முகவரி: தலைவர், தோப்புக் காடுமுருகன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், காரைநகர்.
706

### தேவை

தற்காலிக லிகிதர் தேவை. ஆங்கிலம் J. S. C. யுடன் தமிழ் S. S. C. (G. C. E) சித்தி யெய்தியவராகவும், பிணைப் பணம்கட்டக் கூடியவராகவும் முப்பது வயதுக்கு உட்பட்டவராகவும், கந்தோர்க் கௌரவ உத்தியோகத்தருக்கு கடங்கி நடக்கக் கூடியவராகவும் உள்ளவரிடமிருந்து 25-2-63க்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் மனு ஏற்கப்படும். நற்சாட்சிப் பத்திரம் இரண்டுடன் சொந்தக் கையெழுத்தில் கீழ்காணும் முகவரிக்கு மனுச்செய்க.

விசேஷ தகமைகள் கவனிக்கப்படும். ஆரம்பவேதனம் ரூ. 60. தகுதிக் கேற்ப கூட்டிக் கொடுக்கப்படும்.

கௌரவ காரியதரிசி, யாழ் விவாக அந்தியகால சேமலாப நிதிச் சங்க லிமிடெட் 11, ஜி. மொம்சாக் பில்டிங், யாழ்ப்பாணம். 708

### விளம்பரம்

யாழ் விவாக அந்தியகால சேமலாப நிதிச் சங்கம் மாம்சாக் மாளிகை, யாழ்ப்பாணம்.

மேற்படி சங்கத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. சமுத்துக்குமாரசாமி ஐயர் கடமையிலிருந்து விலகிவிட்டார்.

இதுவரையில் அவர் பேரில் அனுப்பப்பட்ட மணி ஓடர், போஸ்டல்ஓடர்களுக்குமேற்படி சங்கம் பாத்திரவாளியல்ல. இனிமேல் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.
709 காரியதரிசி.

### தேவை

கலைவாணி ருது. விவாக, பிரசவ அந்தியகால லாப நிதிச் சங்கத்திற்கு அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கு பிரதிநிதிகள் தேவை. விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

276, காங்கேசன் துறை வீதி,
710 யாழ்ப்பாணம்.

### தேவை

நல்லூர் செல் நிரப்பு நிலையத்திற்கு, அனுபவமிக்க பகல் விற்பனையாளர் தேவை. உடனடியாக நட்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். பிணைப்பணமாக ரூபாய் 1000 கட்டல் வேண்டும்.
711 சோ. சிங்காரவடிவு.

### ஏலவிற்பனை

வவனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாஜத்தின் நல்ல நிலைமையில் உள்ள 5 பாவித்த ரயர்கள் ஏலவிற்பனைக்கு உண்டு.

ஏலவிற்பனவு 25-2-63 காலை 10-00 மணிக்கு மாங்குளம் ப. நோ. கூ. சங்கமண்டபத்தில் நடைபெறும்.

**ரயர் விபரம்**

5 மிச்சிலின் ரயர்:
7.50-20 x PRIO
மற்றும் பொருட்களும்.

கா. ஏரம்பு, கௌரவ காரியதரிசி, வ. வ. ப. நோ. கூ. ச. சமாஜம், நெடுங்கேணி.
712

**வியாபாரம்பெருக விளம்பரம்செய்க**

### கிராமச் சங்கங்கள் கட்டளை சட்டம் 17(5)ம் பிரிவின்படியான அறிவித்தல்

என் 329—1961 இன் 60ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்படியான கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு காரியவசம் பத்திரகே எட்வின் பியதிலக, பதில்உள்ளுராட்சி உதவி ஆணையாளர் கிழக்குப் பிரதேசம் (மேல்) திருகோணமலை ஆகிய நான் திருகோணமலை மாவட்டத்துக் கட்டைப்பறிச்சான் கிராமச் சபைக்குத் தலைவர் தெரிவுசெய்யும்பொருட்டு 28—2—1963 அன்று பிற்பகல் 2-00 மணிக்குகட்டைப்பறிச்சான்கிராமச்சபைக் காரியாலயத்தில் அக்கிராமச்சபை அங்கத்தவரின் கூட்டமொன்றை இத்தால் கூட்டுகிறேன்.

ஒப்பம். கே. பி. இ. பியதிலக,
பதில் உள்ளுராட்சி உதவி அதிகாரி,
கிழக்குப் பிரதேசம் (மேல்)
உள்ளுராட்சித் திணைக்களம்,
கிழக்குப் பிரதேசம் (மேல்)

### ஆயுர்வேதப்பகுதி அறிவித்தல் 1961-ம் ஆண்டு 31-ம் இலக்க ஆயுர்வேதச் சட்டம் ஆயுர்வேதவைத்தியசபைக்குத் தெரிவுச்

என் 327-1 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ந் திகதி 13,399ம் இலக்க அரசாங்க வர்த்தமானி அனுபந்தத்தில் வெளிவந்த 2ம் இலக்க ஆயுர்வேத (சபைகளுக்குத் தெரிவுகள்) பிரமாணங்களுக்கு அமைய ஆயுர்வேத வைத்திய சபைக்கு மூன்று அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்காக; தெரிவு நியமனங்கள் 1961ம் ஆண்டு வெளிவந்த ஆயுர்வேதச் சட்டம் 31 ம் இலக்கம் 11ம் பிரிவு (1) உப பிரிவு (ஈ) பந்திப்படி கோரப்படுகின்றன.

2. தெரிவு நியமனப் பத்திரங்கள் 1963ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணி வரையும் ஆயுர்வேத அதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆயுர்வேத அதிபதி

ஆயுர்வேதப்பகுதி,
325, கொட்டாரேட், கொழும்பு,

குறிப்பு:—

1962ம் ஆண்டு வெளிவந்த ஆயுர்வேத (சபைகளுக்குத் தெரிவுகள்) பிரமாணங்கள் 1ம் பகுதி 6(பி)பிரிவுப்படி தேர்தலுக்கு நிற்கும் ஒவ்வொரு அபேட்சகரும் ஆயுர்வேத அதிபதியிடம் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் குறிப்பிட்ட தினத்துக்குமுன் நூற்றைம்பது ரூபாய் கட்டுப்பணம்' செலுத்துதல்வேண்டுமென்பதை தெரிவுக்கு நிற்கும் அபேட்சகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது.

2. தெரிவு நியமனங்களை ஆயுர்வேத அதிபதியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### ஆயுர்வேதப்பகுதி அறிவித்தல் 1961-ம்ஆண்டு 31-ம் இலக்க ஆயுர்வேதச் சட்டம் ஆயுர்வேத கல்லூரிக்கும் ஆரோக்கியசாலை பரிபாலன சபைசகும் தெரிவு

என் 327—(2) 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ந்திகதி 13,399ம் இலக்க அரசாங்க வர்த்தமானி அனுபந்தத்தில் வெளிவந்த 4ம் இலக்க ஆயுர்வேத (சபைகளுக்குத் தெரிவுகள்) பிரமாணங்களுக்கமைய ஆயுர்வேதக் கல்லூரிக்கும், ஆரோக்கியசாலை பரிபாலனசபைக்கும் இரண்டு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்காக தெரிவுநியமனங்கள் 1961 ம் ஆண்டு வெளிவந்த ஆயுர்வேதச் சட்டம் 31ம் இலக்கம் 22ம் பிரிவு(1)ம் உபபிரிவு (ஏச்) பந்திப்படி கோரப்படுகின்றன.

2. தெரிவு நியமன பத்திரங்கள் 1963ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாந் திகதி வெள்ளிக்கிழமை பகல் பன்னிரண்டுமணி வரை ஆயுர்வேத அதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆயுர்வேதப்பகுதி

ஆயுர் வேதப்பகுதி,
325, கொட்டா ரோட்டு, கொழும்பு

குறிப்பு:—

1. 1962ம் ஆண்டு வெளிவந்த ஆயுர்வேத(சபைகளுக்கு தெரிவுகள்) பிரமாணங்கள் முதலாம் பகுதி 6(பி) பிரிவுப்படி தேர்தலுக்கு நிற்கும் ஒவ்வொரு அபேட்சகரும் ஆயுர்வேத அதிபதியிடம் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும்குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் நூற்றைம்பது ரூபாய் கட்டுப்பணம் செலுத்துதல்வேண்டும் என்பதை தெரிவுக்குநிற்கும் அபேட்சகர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

2. தெரிவு நியமனப்பத்திரங்களை ஆயுர்வேத அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### சுற்றவாளி

பாணந்துறை, வியாழன்

18 வயதுள்ள பாடசாலை மாணவனைத் தாக்கியதாக பாணந்துறை முன்னாள் உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. எப். எச். டி' சேரம்மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், எதிரி சுற்றவாளியெனக் கூறி, பாணந்துறை மாஜிஸ்டிரேட் விடுதலை செய்தார்.

## செய்தித் திரட்டு

### அனுதாபம்

மட்டக்களப்பு, வியாழன்

திரு. இராஜலிங்கத்தின் அகால மரணம் குறித்து, மட்டக்களப்பு தமிழாசிரியர் சங்கக் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அன்னாரின் மரணம் குறித்து இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

### பாராட்டு விழா

வேலணை, வியாழன்

வேலணை அரசினர் மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கு மாற்றலாகி சென்றிருக்கும் திரு. வே. தம்புவின் சேவையைப் பாராட்டு முகமாக பிரியாவிடை விழாவொன்றை நடாத்த கல்லூரி மாணவர்கள் ஒழுங்குசெய்துள்ளனர்.

### பெயர் மாற்றம்?

வேலணை, வியாழன்

வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலைக்கு முன்பாகச் செல்லும் வீதிக்கு "ஆத்திசூடி வீதி" என பெயரிடுமாறு வேலணைக் கிராமசபையைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று அண்மையில் நடைபெற்ற வேலணை வடக்கு இளைஞர் கழகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

### சங்கக் கூட்டம்

ஊர்காவற்றுறை, வியாழன்

சரவணை 'நாகேஸ்வரி' வித்தியாசாலைப் பெற்றூர் – ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் அண்மையில் தலைமை ஆசிரியர், திரு. அ. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

### இலவச திரைப்படம்

தொல்புரம், வியாழன்

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் நிலைய விளையாட்டு மைதானத்தில் அமெரிக்க தகவல் பகுதியினரால் ஓர் இலவச திரைப்படம் காண்பிக்கப்பட்டது.

### பிரியாவிடை

தொல்புரம், வியாழன்

தொல்புரம் மத்திய மகளிர் சனசமூக நிலையக் காரியதரிசி திருமதி வி. முருகையா ஆசிரியர் கலாசாலைக்குக் கல்வி பயிலச் செல்வதை முன்னிட்டு நிலைய நிர்வாக சபையாரால் அண்மையில் விருந்துபசாரமும் பிரியாவிடைக் கூட்டமும் நடத்திக் கௌரவிக்கப்பட்டது.

### தற்கொலை

சொர்ணதோட்டம், வியாழன்

பள்ளேகமவிலுள்ள ஒரு கூட்டுறவு சங்கத்தில் மனேஜராகக் கடமையாற்றி வேலை இழந்த 24 வயதுள்ள ஆர். எம். ஏ. ரத்னயக்கா என்பவர் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

### அபராதம்

கம்பஹா, வியாழன்

லைசன்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்ததாக பியாகமவைச் சேர்ந்த குணசேகரா என்பவர்மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், கம்பஹா மாஜிஸ்டிரேட் எதிரிக்கு 100 ரூபாய் அபராதம் விதித்தார்.

### விடுதலை

இரத்தினபுரி, வியாழன்

அரிசித் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட பெரேரா, ஒடிறில் சில்வா ஆகிய இருவரும் இரத்தினபுரி மாஜிஸ்டிரேட்டினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அமெரிக்க

# எண்ணெய்க் கம்பெனிகளை தேசியமயமாக்குக

## இ. தொ. சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு, வியாழன்

இலங்கையிலுள்ள அமெரிக்க எண்ணெய்க்கம்பனிகளை இலங்கை அரசாங்கம் தேசியமயமாக்க வேண்டுமென்று இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் கருத்து தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க சமாதானக் குழுவை திருப்பி அனுப்புவதுடன் 'வாயிஸ் ஒவ் அமெரிக்காவுடன்' இலங்கை வானொலி செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தையும் அரசாங்கம் ரத்துச் செய்யவேண்டுமென்று இச்சங்கம் கருதுகிறது.

இலங்கையிலுள்ள ஆசிய நிறுவன சங்கத்தையும் அரசாங்கம் கலைக்கவேண்டுமென்று இச்சங்கம் கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாக இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசி திரு. என். சண்முகதாசன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

'இலங்கைக்கான தமது வெளிநாட்டு உதவிகளை அமெரிக்க அரசாங்கம் நிறுத்தி வைத்தது குறித்து இச்சங்கம் கண்டனம் தெரிவிக்கின்றது.

இதுகுறித்து இலங்கை அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள முடிவை இச்சங்கம் வரவேற்கின்றது.

இலங்கையிலுள்ள அமெரிக்க எண்ணெய்க்கம்பெனிகளுக்கு இலங்கை அரசாங்கம் நஷ்டஈடு வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து அமெரிக்க அரசாங்கம், இலங்கைக்கு வழங்கி வந்த தனது வெளிநாட்டு உதவிகளை நிறுத்தியதற்கு தொழிலாளர்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்'.

ஆசிரியருக்குக் கடிதம்

### வீண் ஆரவாரம்

தமிழ் மக்களின் இன்றைய நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. இன்று அவர்கள் சொந்த மண்ணிலேயே இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டுள்ளனர். எமது இன்றைய நிலைக்குக்காரணம் தமிழரிடையே ஒற்றுமை இல்லாமையே. தமிழ் பேசும் மக்கள் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியிருக்கும் இவ்வேளையில் யாழ்ப்பாண கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கிளையினர் தமது மகாநாட்டை கோலாகலமாகக் கொண்டாட எண்ணியிருப்பது துக்கப்படத்தக்க காரியமாகும்.

இவ்வேளையில் இது அவசியம்தானா? ஆக்கமான செயல்களில் ஈடுபடவேண்டிய நேரத்தில் வீண் ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் ஏன்? சமதத்தையும் கைத்தொழிலையும் வளர்க்கவேண்டியகாலத்தில் கண்டனமும் கூக்குரலும் பயன் தருமா?

அரசியலில் எந்த நோக்கங் கொண்டாலும் வாலிபர்கள் தங்கள் வல்லமையை ஆக்க வேலைகளில் செலுத்த வேண்டும். அதற்கு வேண்டிய ஊக்கமளிக்க ஆயிரக்கணக்கான தமிழர் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

கா. சுப்பிரமணியம்

### ராஜினாமா

திருமலை, வியாழன்

கட்டைப்பறிச்சான் கிராம சபைத் தலைவர் திரு. எஸ். குணநாயகம், கிராமசேவையாளர் பயிற்சிக்குச் செல்வதால் அவர் தமது தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

### 'தனிநபரின் கூக்குரலால் பயனில்லை'

யாழ்ப்பாணம், வெள்ளி

"நாங்கள் தனித்தனியாக நின்று எவ்வளவு கூக்குரல் எழுப்பினலும் ஒருவித பலனும் கிடைக்கபபோவதில்லை. ஆதலால் தான் இச்சங்கத்தை நிறுவி இதன் மூலம் நமது கோரிக்கைகளைப் பெற வழி வகுத்துக்கொண்டோம். ஒவ்வொருவரும் நமது சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து, சங்கத்தைப் பலப்படுத்த வேண்டும். சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒற்றுமைதான் அவசியம்"என்று வட இலங்கை பிறைவேட்ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கத்தின் கூட்டம், இணுவில் ஆஸ்பத்திரி தாதிமார் வகுப்பறையில் திரு. சிவஅன்புவின் தலைமையில் நடந்தபோது சங்கக் காரியதரிசி திரு. ஜோசெப் கூறினர்.

இணுவில் 'மக்லியோட்' ஆஸ்பத்திரி தொழிலாளர்களும், மானிப்பாய் கிறீன் மெம்மோறியல்' ஆஸ்பத்திரி தொழிலாளர்களும் கூட்டாகச் சேர்ந்து இச் சங்கத்தை ஆரம்பித்துள்ளார்கள். மூளாய் ஆஸ்பத்திரி, தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரி, புத்தூர் ஆஸ்பத்திரி ஆகியவற்றில் கடமையாற்றும் தொழிலாளர்களையும் இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ப்பதற்கு, முயற்சிகள் நடைபெற்றுவருகிறது.

### குண்டு வீச்சு

கொழும்பு, வியாழன்

கொழும்பு, சென்ட் ஜோன்ஸ் பொருள் வைப்பு நிலையத்தின் மீது வெடிகுண்டு ஒன்று வீசப்பட்டதாக பொலிஸ் தலைமைக் காரியாலயம் நேற்று அறிவித்தது.

### கைதடியில் சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கத்தின் நான்காவது மஹா சிவராத்திரிவிழா கைதடி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவிலில், 22-2-63 வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. அக்தருணம் விசேட பூசை, அபிஷேகங்கள் நான்கு மாதங்களிலும் வழக்கம்போல நடைபெறுவதோடு அன்று இரவு முழுவதும், புராணபடலம், சொற்பொழிவு, கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும்.

பகல் சிவதீட்சை பெறவிரும்பும் அடியார்களுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதுடன், இலங்கை வானொலி மூலம் அஞ்சல் செய்யப்படும், திருக்கேதீச்சர சிவராத்திரி விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளை கேட்பதற்கும் ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### பாம்பு பண்ணைக்கு மன்னர் விஜயம்

பம்பாய், பெப். 14

கிரீஸ் நாட்டு மன்னர் பால், ஹாப்கின் கழகத்திற்கு விஜயம் செய்து நல்ல பாம்பு ஒன்றிடமிருந்து விஷம் கறக்கப்படுவதை நேரில் பார்த்தார். கறக்கப்பட்ட விஷம், பின்னர்பாம்புக்கடி மருந்தாக தயார்செய்யப்பட்டது.

ராணுவ உடையில் இருந்த கிரீஸ் மன்னர், ஹாப்கின் கழகத்தின் திறந்த வெளி பாம்புப்பண்ணையைப் பார்வையிட்டார் உலகிலேயே, இயற்கையின் சூழ் நிலையில் பாம்புகளை வளர்க்கும் ஒரே பாம்புப் பண்ணை இதுவேயாகும்'

# நேரடிப் பேச்சுக்கு சீனுவே தடைசெய்கிறது

## சீன அதிபரின் கருத்துக்கு இந்திய அதிகாரி விளக்கம்

புதுடில்லி, பெப். 14

இந்திய-சீன எல்லைப்பிரச்னைக்கு சமாதானத் தீர்வு காணுமுகமாக கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகளுக்கு சீனு கொண்டுள்ள கருத்துக்களை விளங்கிக் கொள்வது கடினமாக இருக்கிறதென்று இந்திய வெளிவிவகார இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### தடை செய்வது யார்

எல்லைப்பிரச்னை சம்பந்தமாக இந்தியாவும் சீனுவும் நேரடிப் பேச்சு நடத்துவதற்கு கொழும்பு யோசனைகளைச் சாட்டாக வைத்துக் கொண்டு இந்தியா தடைசெய்து வருகிறதென்று அதிபர் சமீபத்தில் கூறியதாக வெளிவந்த செய்திபற்றி அந்த அதிகாரி குறிப்பிடுகையில், நேரடிப் பேச்சுக்குத் தடைசெய்து வருவதும் நேரடிப்பேச்சுக்கு சிரமமான நிலையை ஏற்படுத்துவதும் சீனுவேயொழிய இந்தியா அல்ல என்று கூறினர். நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு அடிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட கொழும்பு மகாநாட்டு யோசனைகளை இந்தியா அப்படியே முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளது. சீனுவோ இந்த யோசனைகளை ஏற்க மறுக்கிறது. "நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்காக நாங்கள் பொறுமையுடனிருப்போம்" என்று சீனஅதிபர் குறிப்பிட்டதுபற்றி அந்த அதிகாரி கூறுகையில், தாங்கள் ஆக்கிரமித்த பகுதிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அவர்கள் 'பொறுமை'யுடனிருப்பார்களென்ருர். பாரபட்சமின்றி தெரிவிக்கப்பட்ட கொழும்பு யோசனைகளை சீனு அலட்சியபடுத்துகிறதென்று அவர் கூறினர்.

### அஸ்ஸாம் அரசாங்கம் உதவி

சீன ஆக்கிரமிப்பினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிப்பதற்கு அஸ்ஸாம் ராஜ்ய அரசாங்கம் 9,38,000 ரூபாய் ஒதுக்கியுள்ளது. ரொக்கமாகவும் பொருள்களாகவும் உதவிகள் அளிக்கப்படும்.

## கொழும்பு யோசனைகள் நிராகரிக்க வேண்டுகோள்

கல்கத்தா, பெப். 14

ஆக்கிரமிப்பாளரையும் ஆக்கிரமிப்புக்கானவரையும் சமமாகக் கருதும் கொழும்பு மகாநாட்டு யோசனைகளை நிராகரிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் நிறைவேறியது.

இந்து மகாசபை, ஜனசங், புரட்சிக்கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவைகளின் ஆதரவில் இக்கூட்டம் நடைபெற்றது.

கல்கத்தாவில் நடைபெற்ற மேற்குவங்க பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டமொன்றில் பிரஜாசோஷலிஸ்ட்கட்சி எம். பி. திரு. எச். வி. காமத் பேசுகையில், சீனுவுடன்பேச்சு நடத்துவதற்கான ஒரு அடிப்படையாக கொழும்பு மகாநாட்டு யோசனைகளை இந்தியா ஏற்ருல் அது மற்றொரு அரசியல் முட்டாள்தனமாகும் என்று கூறினர்.

கொழும்பு யோசனைகளைப் பார்லிமெண்ட் ஏற்றுக்கொண்டதாகக் கூறுவது முற்றிலும் தவருனதென்றும் கொழும்பு யோசனைகள் சம்பந்தமாகப் பிரதமருக்கு பார்லிமெண்ட் எதுவித கட்டளையும் பிறப்பிக்கவில்லையென்றும் திரு. காமத் கூறினர்.

## தென்னுபிரிக்காவில் இந்துக்கோயில்

நேட்டால், பெப். 14

தென்னுபிரிக்காவிலுள்ள நேட்டாலில் உள்ள இந்துக்கள் உம்கோமாஸ் என்ற இடத்தில் ஸ்ரீ வெங்கடாசலபதி கோவில் ஒன்றை நிறுவி, 43 ஆண்டுகளுக்கு முன்செய்து கொண்ட பிரார்த்தனையை நிறைவேற்றியிருக்கின்றனர்.

இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட கருங்கல்லாலான ஸ்ரீ வெங்கடாசலபதி சிலையொன்றைக் கொண்டுவந்து, அழகான இச் சிறிய கோவிலில் வைத்து அதில் பிரதிஷ்டை செய்து, உற்சவாதிகளும் கொண்டாடி வருகிருர்கள்.

## படைகளைப் பலப்படுத்த மலாயா முடிவு

### மந்திரிசபைக் கூட்டத்தில் தீர்மானம்

கோலாலம்பூர், பெப். 14

மலாயா தனது படைகளைப் பலப்படுத்த முடிவு செய்துள்ளது. 1500 பேர் தரைப்படை விமானப்படை, கடற்படை, ஆகியவைகளுக்கெனப் புதிதாகத் திரட்டப்படவிருக்கின்றனர்.

இப்பொழுது மலாயாவில் பதினையாயிரம் வீரர்களைக் கொண்ட ராணுவம் உள்ளது.

நேற்று நடைபெற்ற மலாயா மந்திரிசபையின் அவசரக் கூட்டத்தின் பின் மலாயா உதவிப்பிரதமர் ரஸாக், படைதிரட்டும் தீர்மானம்பற்றி அறிவித்தார்.

உத்தேச மலேசியா சம்மேளன அமைப்புக்கு இந்தோனேஷியா காட்டிவரும் எதிர்ப்பு மலேசியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானதாக இருப்பதாக மலாயா அரசாங்கம் கருதுகிறது,

மலாயாவின் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மலாயாசட்டவைபயில் சோஷலிஸ்ட் எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் சிலரும் நேற்றுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். இவர்கள் இந்தோனேஷிய கம்யூனிஸ்ட்கட்சியினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனராம்.

## ஆர். கே. நேரு பயணம்

புதுடில்லி, பெப். 14

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் சுற்றுப்பிரயாணம் செய்து இந்திய-சீன எல்லைப் பிரச்னையில் இந்தியாவின் நிலைபற்றி விளக்கிக் கூறுவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சின் தலைமைக காரியதரிசி திரு. ஆர். கே. நேரு பயணமானர்.

## ஒரே சூலில் நானகு கன்றுகள்

நாகர்கோவில், பெப். 13

தோவாளையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளையின் பசு மாடு ஒன்று ஒரே சூலில் நான்கு கன்றுகளை ஈன்றது. ஆனல், நான்கு கன்றுகளும் இறந்துவிட்டன.

## மற்றேர் இந்திய கணித மேதை

வாரணுசி, பெப். 13

கணிதத்தில் மிக்க அறிவைக் காட்டியுள்ள திரு. சயந்த்நர்லிகர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் 'கிங்ஸ்' கல்லூரியின் 'பெர்ரி ராம்சே' உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கணித அறிவுக்காக சென்ற வருடம் இவர், 'சிமித்' பரிசைப் பெற்ருர்.

திரு. நர்லிகர், 25 ஆண்டுகளாக இப்பரிசைப்பெறும் மூன்ருவது இந்தியராவார்.

கணிதத் தேர்வுகள் பலவற்றில் திரு. நர்லிகர் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

## கல்லோயா பிரண்டி சி. ஐ. டி. அதிகாரி விசாரணை

கொழும்பு, வியாழன்

நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாகவே கல்லோயா பிரண்டி விற்பனை செய்யப்பட்டது. சம்பந்தமாக விசாரணை செய்யும் பொருட்டு சி. ஐ. டி. அதிகாரிகள் நேற்று கொழும்பிலுள்ள பல உணவு விடுதிச் சாலைகளுக்கும் விஜயஞ் செய்தனர்.

கொழும்பிலுள்ள சில உணவு விடுச்சாலைகளிலுள்ள வெயிட்டர்களை சி. ஐ. டி. அதிகாரிகள் நேற்று விசாரணை செய்தனர். பாவனையாளர்களுக்கு கல்லோயா பிரண்டி விற்பனை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்மீது சி. ஐ. டி. அதிகாரிகள் வெயிட்டர்களை விசாரணை செய்தனர்.

சி. ஐ. டி. அதிகாரிகளின் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் காணி, விவசாய நீர்ப்பாசன மந்திரிக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் [illegible]றிக்கை சமர்ப்பிப்பார்.

## காப்பாளராகத் தெரிவு

யாழ்ப்பாணம், வியாழன்

இசைக்கலை மன்றத்தின் நிகழ்ச்சிகள் பலவற்றுக்குப் பெருளுதவி புரிந்தும், சென்ற வருடக் தமிழிசை விழாவை ஆரம்பித்துத் தலைமைதாங்கி நடாத்தி உதவியவருமான டாக்டர் பி. சுப்பிரமணியத்தை அண்மையில் இசைத்தமிழ் மன்றததுக் காப்பாளர்களுள் ஒருவராக இருக்கக் கோருவதென்று மன்றச் செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றது.

# இந்தியச் செய்தி

## பேச்சுப் போட்டி

சென்னை, பெப். 14

கல்லூரி மாணவர்களுக்கான 'கல்கி' ஞாபகார்த்த தமிழ் பேச்சுப் போட்டி, மயிலாப்பூர் நரேந்திர தேவ் நூல் நிலையத்தில் நடைபெற்றது. தென் இந்திய இளைஞர் சங்க ஆதரவில் நடைபெற்ற இப் போட்டியில், கல்வி ஞாபகார்த்த குமுதம் சுழற்கோப்பை, சட்டக்கல்லூரி கோஷ்டிக்கு கிடைத்தது.

## ஹரிஜனங்கள் நியமனம்

சென்னை, பெப். 14

சென்னை நகரசபை அங்கத்தினர்களாக மூன்று ஹரிஜன வாக்காளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## இழந்த பொருட்கள்

பம்பாய், பெப். 14

யு. எஸ். டாலர்கள், பாஸ்போர்ட் மற்றும் தஸ்தாவேஜுகள்கொண்டஒரு கைப்பையை, கிரேக்க மன்னருடன் சுற்றுப் பிரயாணம் செய்யும் ஒரு கிரேக்க நிருபர் கடந்த வாரம் பம்பாயில் இழந்தார். அதை பம்பாய் பொலிஸார் கண்டெடுத்து, நிருபரிடம் கொடுத்தனர். இது சம்பந்தமாக கார்ச் சாரதியொருவர் கைது செய்யப்பட்டார்.

## சிறைத்தண்டனை

சில்சார், பெப். 14

விசா இல்லாது இந்தியாவுக்கு வந்த மூன்று பாகிஸ்தானியர்களுக்கு கச்சார் அடிசனல் உதவி கமிஷனர், மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

## 428 பேர் பலி

கல்கத்தா, பெப். 14

கல்கத்தா சுற்றுப்புறங்களில், கடந்த ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம்வரை நடைபெற்ற விபத்துக்களில் 428 பேர் உயிரிழந்தனர். ரயில் பாதைகள்மீது அஜாக்கிரதையாக நடந்துசென்றதால் இந்த விபத்துக்கள் ஏற்பட்டன.

## தீக்கிரை

மதுரை, பெப். 14

மதுரையிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள கழுவான்குளம் கிராமத்தில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் 20 குடிசை வீடுகள் சாம்பலாயின.

## பசி வாரம்

புதுடில்லி, பெப். 14

இந்தியாவில் மார்ச் மாதம் 17-ம் திகதிமுதல் 23-ம் திகதிவரை "விடுதலை வாரம்" அனுஷ்டிக்கப்படும். இதனை அனுஷ்டிக்க உலகம் பூராவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## அரைப்பட்டு மரணம்

கல்கத்தா, பெப். 14

பெல்காரியா புகையிரத நிலையத்தில், ஓடிக்கொண்டிருந்த பிரயாணிகள் ரயிலில் ஏற முயன்ற மூவர், அரைபட்டு மாண்டனர்.

## மூடுபனி

சென்னை, பெப். 14

சென்னை நகரில் நேற்றுக் காலை கடுமையான மூடுபனி காணப்பட்டது. 15 அடித் தூரத்துக்கு எதையும் பார்க்க முடியவில்லை. காலை 6 மணியிலிருந்து 40 நிமிட நேரம்வரை மூடுபனி பெய்தது.

## விமானி மரணம்

ஹைதராபாத், பெப். 14

ஹைதராபாத் விமான சங்கத்தைச் சேர்ந்த பயிற்சி விமானமொன்று இப்றஹீம் பட்டண ஏரியில் விழுந்து மூழ்கியதன் விளைவாக விமானி மரணமானர்.

## பட்டினி மரணம்

திருச்சி, பெப். 14

தங்கக் கட்டுப்பாடு உத்தரவு அமுலினல், வேலை இழந்த 6 பொற்கொல்லர்கள், பசியினல் மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'பிரிவினையை ஏற்கவில்லை'

### காஷ்மீர் சட்டமந்திரி பேச்சு

ஸ்ரீநகர், பெப். 14

காஷ்மீர் சட்டசபையில் கதிரிதியாசத் நிகழ்த்திய உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தை இருசபைகளும் ஏற்கொண்டன.

நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்துக்கு மேல்சபையில் சட்ட மந்திரி மகாஜன் பதிலளித்துப் பேசுகையில் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து லடாக்கில் மக்கள் காட்டிய தீரத்தைப் பாராட்டினர்.

காஷ்மீர் பற்றி இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை நடத்துவதால் காஷ்மீர் பிரிவினையை ஏற்றுக் கொண்டதாக அர்த்தமில்லையென்று கூறினர்.

## மந்திரிக்கு மகஜர்

பருத்தித்துறை, வியாழன்

அல்வாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் புலோலி (மந்திரிகை) அரசினர் வைத்தியசாலை சம்பந்தமாக உடுப்பிட்டி, பருத்தித்துறை பாராளுமன்றப் பிரதிநிதிகட் கூடாக மகஜர் ஒன்றை சுகாதார அமைச்சருக்கும் அதிபருக்கும் அனுப்பிவைத்துள்ளது. மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வைத்தியசாலையில் பார்வையாளர் அனுமதிக்கப்படும் நேரம் பற்றிய அறிவித்தல் போடப்படவேண்டும்.

பார்வையாளர்கள் குறித்த நேரம்வரை நடுவீதியிலும் கான்களிலும் தங்காதவகையில் மண்டபம் ஒன்று அமைத்து உதவவேண்டும்.

நோயாளர்கட்கு உணவு கொண்டுசெல்ல வண்டி ஒன்று உதவவேண்டும்.

அதிக பெண்கள் சிகிச்சை பெறுவதால் பெண் டாக்டர் ஒருவரை நியமிக்கவேண்டும்.

## வட ரொடீஷியா தீர்மானம்

லண்டன், பெப். 14

ரொடீஷியா நியாஸலாந்து கூட்டரசிலிருந்து வட ரொடீஷியாவை விலக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்று வடரொடீஷியசட்டசபையில் நிறைவேறியது.

**மகான் வாக்கு**

ஒவ்வொரு மனிதரும், பெண்ணும் உடலால் எவ்வளவு இளைத்தவராயினும்சரி, அவர்கள் தங்கள் மானத்தையும் சுதந்திரத்தையும் தாங்களே காத்துக் கொள்ளக்கூடிய காவலர் என்ற அவர்களை உணரச் செய்துவிட்டேனுகில், என் வேலை முடிந்ததாகும். ஒரு தனி ஆளை, உலகமே எதிர்த்து நின்ருலும்சரி, அவருக்கு இந்தத் தற்காப்பு அவசியத் தேவையாகும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 3 உ (15-2-63)

## நமது குற்றம்

அமெரிக்க உதவிநிறுத்தம் பற்றிய நிலைமையை மந்திரிசபை ஆராய்ந்துவரும் இச்சமயத்தில் ஒருமுக்கிய விஷயத்தை அது ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பிறர்மீது குற்றம் சுமத்துமுன், நம்மீது எவ்வித குற்றமுமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதவசியமாகும்.

இலங்கைப் பார்லிமெண்ட் நிறைவேற்றிய சட்டப்படி, அரசாங்கம் எடுத்துக்கொண்ட பெட்ரோல்கம்பெனி உடைமைகளுக்கு நியாயமான நஷ்டஈட்டைகொடுக்கக்கடமைப்பட்டுள்ளது. அந்த உடமைகளைக் கைப்பற்றியதும், நஷ்டஈடு தருவதுபற்றிய பேச்சுவார்த்தைகளையோ, நடவடிக்கைகளையோ அரசாங்கம் எடுத்திருப்பின், இன்றுள்ள அவலநிலை ஏற்படாமற் தடுத்திருக்கலாம். அதற்கான நடவடிக்கையை காலாகாலத்தில் அரசாங்கம் ஏன் எடுக்கவில்லை?

எக்காரணம்பற்றி அரசாங்கம் இவ்விஷயத்தில் அசமந்தமாக இருந்திருப்பினுஞ்சரி, தாங்கள் நிறைவேற்றிய சட்டத்தைத் தாங்களே வெகுவாக மதிக்காமலிருந்தது ஒரு பெரிய குற்றம் என்பதை அரசாங்கம் மறுக்க முடியாது. பஸ் முதலாளிகளுக்கு நஷ்டஈடு அளிப்பது தவக்கப்பட்டதாக ஒருசமாதானம் சொல்லப்படலாம். அதுவும் ஒரு தவறுதான். ஒருதவறு மற்ருெரு தவறை நியாயமாக்கி விடமுடியாது.

தனிப்பட்டவரின் எந்தஉடைமையையும் அரசாங்கம் எடுக்கும்போது, அதற்கு நியாயமான நஷ்டஈடு அளிப்பதென்ற அடிப்படைக் கொள்கையை அரசாங்கம் பின்பற்றி வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனல் வாயளவில் கொள்கையைக் கூறிவிட்டு, நடப்பிலே அதை நிறைவேற்ற அதிக தாமதம் செய்வது, அந்தக் கொள்கையை அநேகமாக மறுப்பதாகவே முடியும். அதிலும், ஓர் அந்நியநாட்டைப் பொறுத்தவிஷயத்தில் நாம் அதிக கவனமாக இருந்திருக்க வேண்டும்.

# கிராமதானம் : நமக்கென்று ஒரு கருத்தும் கொள்கையும்

— ஆச்சாரிய விநேபாஜி —

**கிராமதானக் கருத்து நம் சொந்தக் கருத்து. இந்தியாவின் முத்திரை பொறித்த கருத்து. இதில் முதலாளித்துவத்திலுள்ள குறைகளும் இல்லை; பொதுவுடைமையில் காணப்படும் கோளாறுகளும்கிடையாது. முதலாளித்துவம் ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்தத்தில் உரிமை வேண்டுமென்று சொல்ல, பொதுவுடமையோ சொத்தெல்லாம் அரசாங்கத்தினுடையது என்கின்றது இந்த இரண்டு ஏற்பாடுகளுமே இருவகைகளில் ஆபத்தானமையாயிருப்பதால் நான் இவை இரண்டும் வேண்டாம், கிராமத்தின் நிலம் முழுவதையும் கிராமப் பொதுவாக்கி விடுவோம் என்கிறேன். இது நம் நாட்டிற்கே உரிய ஒரு சிறப்பான ஏற்பாடாய் இருக்கும்........**

இது ஒருபுறமிருக்க, அமெரிக்காவும், இலங்கைமக்களின் அபிமானத்தைப் பெரிதென மதித்திருப்பின், இவ்விதம் உதவி மறுப்புச் செய்திருக்காது. அவர்கள் தங்கள்நாட்டு மக்களின் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளச் சட்டம் நிறைவேற்றியுள்ளது உண்மையே. ஆனல் உதவிமறுத்த காரணத்தால் நஷ்டஈடு உடன் கிடைத்ததா? இல்லை. அத்துடன் இலங்கைப் பொதுமக்களின் அபிமானத்தையும் அமெரிக்கா இழக்கக்கூடிய ஓர் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இது அவர்களுக்கு எச்சரிக்கையாக இருந்து, மேற்குறித்த சட்டத்தைப்பற்றி அவர்கள் புனராலோசனை செய்ய வேண்டும்.

பின்தங்கிய நாடுகளுக்கு அமெரிக்கா உதவி அளிக்கும் நோக்கமென்ன? ஏழ்மைதான் கம்யூனிஸம் பரவ அடிப்படைக் காரணமாக இருக்கிறதென்பதைக் கண்டு, அந்த ஏழ்மையை நீக்கவும் பின்தங்கிய நாடுகள் ஜனநாயகபாதையில் முன்னேறவும், கம்யூனிஸ கோஷ்டியில் விழாமல் தடுக்கவுமேயாகுமென்பது பகிரங்க ரகசியம். நமக்கு உதவி அளிக்கும் நோக்கம் இங்கு தங்கள் நாட்டுமக்களின் உடைமைகளையும், வியாபாரத்தையும் பாதுகாத்துக் கொள்ளவே என்பதாயின், அவ்வித உதவியை இலங்கை மட்டுமன்றி மானமுள்ள எந்தநாடும் பெற மறுத்துவிடலாம்.

இன்று ஏற்பட்டுள்ளது ஒரு விரும்பத்தகாத துரதிருஷ்ட நிலையாகும். இதன்பயனக அமெரிக்க—இலங்கை உறவுகள் மோசமாகி வருவதுடன், சிலசுயநலமிகள் இதைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளவும் முற்படுவதைப் பார்க்கின்ருேம். இதுவரை அமெரிக்காவிடமிருந்து நாம் பெற்ற உதவிகளுக்கு எக்காரணம்பற்றியும் நன்றிமறப்பது நன்றன்று. பணத்தைவிட மானம் பெரிதுதான். ஆனல் நம்மீது குற்றம் வைத்துக் கொண்டு, எதிராளிமீது ஆத்திரப்பட்டு மேலும் பலதவறுகளைச் செய்வது கண்மூடித்தனமாகத் தற்கொலை செய்வதாக முடியலாம். ஆகவே ஏற்கெனவே செய்துவிட்ட தன் தவறைக் கூடிய சீக்கிரத்தில் இலங்கை அரசாங்கம் திருத்திக்கொள்வதுடன், நமக்கு உதவிய நண்பர்களை இழக்காத முறையில் இன்றைய சிக்கலான நிலையைச் சமாளிக்க அதற்கு அதிக நிதானபுத்தியும் ராஜதந்திரமும் தீர்க்கதரிசனமும் தேவையாகும்.

சீன இந்தியாவின் மீது படையெடுத்ததை, வெளி உலகக் கருத்துக்களின் படையெடுப்பு என்றே கருதுகிறேன். நாம் நம் கருத்தென்று ஒன்றை உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை. இதனல் நம்மால் வெளியே எதையும் கொண்டு போகவோ, பரப்பவோ முடியவில்லை. இந்நிலையில் வெளியுலகக் கருத்துக்கள் இங்கே வந்து புகாமல் என்ன செய்யும்?

அமெரிக்காவின் உதவியினல் சீனவை எதிர்த்து ஒருவாறு சமாளிக்கிருேமென்று வைத்துக்கொள்வோம். அதனல் என்னவாகும்? அமெரிக்கக் கருத்துக்களின் செல்வாக்கு இங்கே ஓங்கும். இவை இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? ஒன்று கைக்கிறது, இன்னென்று இனிக்கிறது. ஆனல் இரண்டின் விளைவும் நாம் வெளிநாட்டிற்குப் பணிகிருேம் என்ற வகையில் ஒன்றுதான். ஆபத்து நீங்கிவிட்டதென்ற எண்ணத்தினல் நாம் பழையபடி தூங்கத் தொடங்கி விடுவோம். ஆனல் சீன படையெடுத்தது ஒருவகையான ஆபத்தென்ருல் அமெரிக்காவின் உதவியைப் பெறுவதில் இன்னெருவிதமான ஆபத்தும் இருக்கிறது. ஆகையால் நாம் நம் சொந்தக் கருத்தென்று ஒன்றை வைத்துக்கொண்டு அதை வெளியுலகிலும் பரப்பும் பொழுதே ஆபத்தில்லா நிலைமை ஏற்படும்.

பன்னிரண்டாண்டுகளாக இதை நான் இந்தியாவுக்குச் சொல்லி வருகிறேன். பூதானமும் கிராமதானமும் செய்து கிராமங்களை இணையுங்கள் என்று சொல்லிவருகிறேன். இது நடந்தால் ஒருபுறம் முதலாளித்துவமும் அழிந்து போகும், மறு புறத்தில் கம்யூனிஸமும் தலைசாய்ந்து விடும். இவ்வாறு இவ்விரு தத்துவங்களும் முடிவுபெறுவதனலேயே இந்தியா தப்பும்; அதற்கு ஆபத்தில்லாத நிலைமை ஏற்படும்.

இன்று பத்திரிகையில் இரண்டு பெரிய கப்பல்கள் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு வருகின்றன என்று படித்திருப்பீர்கள் ஆயுதங்கள் என்பது என்ன, மிட்டாயா, வந்ததும் எடுத்துத் தின்னலாம் என்பதற்கு? நாம் உதவி வேண்டினேம்; அவர்கள் அனுப்பியிருக்கிருர்கள். இதன் விளைவு என்னவாகும்? அமெரிக்கரின் உதவி கிடைத்திராவிட்டால் நாம் தப்பியிருக்க மாட்டோம் என்று மக்கள் நினைப்பார்கள். இதற்கு என்ன அர்த்தம்? நாம் பிறர் உதவியை நம்பியிருக்கின்ருேம் என்பதுதானே? சீன படையெடுத்தது என்பதற்கும் அதுதான் பொருள். ஆகையால் நாம் நம் சக்தியைக் கொண்டே நம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு வழி செய்ய வேண்டும்.

### நமது இன்றைய நிலை

நம் சக்தியென்பது என்ன? ஆயுத பலத்தால், அதாவது ராணுவத்தைக் கொண்டு எதாப்பது என்பது ஒருவகை. இது நம்மிடம் போதிய அளவு இல்லாமையால் வெளி உதவியை நாடிப் பெறவேண்டியிருக்கிறது. மொரார்ஜிபாய் (மத்திய நிதி அமைச்சர்),

"தங்க நகைகள் அணியவேண்டாம். கலியாணப் பெண்களுக்கு நகைகள் அளிக்கவேண்டாம், உங்களிடமுள்ள தங்கத்தையெல்லாம் அரசாங்கத்திடம் கொடுத்துவிடுங்கள்" என்கிருர். அவர் தங்கத்தைப் பெற்று என்னசெய்யப்போகிருர்? இரும்பாக்கப் போகிருர்; அதாவது தங்கத்தைக்கொடுத்துப் பலவகையான ஆயுதங்கள் வாங்கப் போகிருர். ஒருவர் இப்படியும் செய்வாரா? தங்கத்தை விற்று இரும்பு வாங்குவாருண்டா? நாம் எவ்வளவுதான் தங்கம் சேர்த்தாலும் எவ்வளவாகிவிடப்போகிறது? அமெரிக்காவிடம் எவ்வளவு தங்கம் இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா? அதோடு ஒப்பிடும்பொழுது நம்மிடம் இருப்பதையெல்லாம் சேர்த்தாலும் ஒன்றுமாகிவிடாது. அவர்களிடமிருப்பது ஒரு சேரென்ருல் நம்மிடமுள்ளது ஒரு தோலாவின் அளவுகூட இராது. ஆகையால் ஆபத்திலிருந்து தப்புவதற்கு இது வழியே அல்ல. மனிதன் குளத்தில் விழுந்துவிட்டான், மூழ்கிக் கொண்டிருக்கிருனென்ருல் அவனுக்கு அப்பொழுது என்ன செய்வதென்று தெரியாது. கையால் வீணே நீரை உந்தித் தள்ளி அடிக்கத்தான் செய்வான்; அடிப்பதனல் தப்பலாமோ என்று அவனுக்கு ஒரு பிரமை. எவ்வளவுதான் உந்தினலும் அடித்தாலும் அவன் தப்பமாட்டான்; மூழ்கித்தான் போவான். தப்ப வேண்டுமானல் அவனுக்கு நீந்தத் தெரிந்திருக்க வேண்டும். நீந்தத் தெரியவில்லை. பாவம், நீரை அடித்துக்கொண்டிருக்கிருன். நம்நிலை இப்படித்தானிருக்கிறது.

### தப்புவதற்கு வழி

பண்டித நேரு என்னைக் காண வந்திருந்தாரல்லவா? அப்போது அவர், "நமது முக்கியமான பகை வறுமையே. வறுமையைப் போக்குவதற்கு கிராமங்களின் சக்தியைத் திரட்ட வேண்டும்; வளர்க்க வேண்டும். அதற்குவழி கிராமதானம் செய்வதே" என்ருர். இன்றைய நிலையில் எவ்வகையில் பார்த்தாலும் கிராமதானம் நமக்கு நன்மையைப் பயப்பதாயிருக்கிறது. கிராமங்களெல்லாம் கிராமதானமாகி, கிராமங்களின் வலிமை ஓங்குமானல், போரிடவேண்டி நேர்ந்தாலும் நன்ருய்ப் போர்புரிந்து வெற்றிபெற முடியும். போர் வேண்டாம்- சமாதானம் செய்து கொள்வோமென்ருலும் அதற்கும் கிராமதானம் பெரிதும் உதவும். கிராமதானக் கருத்து நம் சொந்தக் கருத்து; இந்தியாவின் முத்திரை பொறித்த கருத்து. இதில் முதலாளித்துவத்திலுள்ள குறைகளும் இல்லை; பொதுவுடைமையில காணப்படும் கோளாறுகளும் கிடையாது.

### தீமைகளைத் தவிர்ப்போம்

முதலாளித்துவம் என்ன சொல்லுகிறது? ஒவ்வொருவருக்கும்தன் உடைமையில் உரிமையுண்டு என்கிறது. எல்லோரும்தனித்தனியேஉடைமை வைத்துக்கொண்டு தன் இஷ்டம் போல் நடந்தால் கிராமத்தைக் கவனிப்பது யார்? நில

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

நேற்று ஒருதமிழரும் சிங்களவரும் சேர்ந்துவந்து "இலங்கை வைத்திய வித்யாசேவை" என்ற துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்தனர்.

"ஏழாம் நாள் ஆசார அட்வென்டிஸ்சபை" என்பதன் ஆதரவிலே கல்வி சுகாதார சேவைகளைச் செய்வதாகவும், சென்ற ஆண்டிலே 17 ஆயிரம் ரூபாய்க்குமேல் செலவழித்துள்ளதாகவும், இவ்வாண்டில் இதேசேவைக்குப் பணம் வசூலிப்பதாகவும் தெரிவித்தனர் இருவரும் கிறிஸ்தவ சமயப் பிரசாரகர்களாம். இச்சபை நல்லசேவை செய்வதை அப்பிரசுரம் காட்டியது.

அந்தச் சபையைப்பற்றியும் நோக்கத்தைப்பற்றியும் விசாரித்ததில், சமூகசேவைமூலம் மதமாற்றம் செய்வதே என்று தெரிந்தது! இவ்வித நோக்கத்துடன் செய்யும் சமூக சேவையை மகாத்மா ஒப்பவில்லை. மதமாற்ற நோக்கமில்லாமல், மனிதாபிமானத்துடன் இவ்வித சேவைகளைச் செய்வதையே தாம் வரவேற்பதாகக் கூறியுள்ளார்.

* * *

பசித்தவனுக்கு உணவு அளிப்பதும், ஏழைக்கு வஸ்திரதானம் செய்வதும், நோய்ப்பட்டவருக்கு மருந்துகொடுப்பதும் மேலான தர்மங்களாகும். இந்தச் சேவையை முற்காலத்தில் கோவில்கள் செய்துவந்தன. இவ்வித தர்மங்களை இப்போது அநேகமாக மறந்து கைவிட்டுவிட்டனர். அதனல் தான் இன்று இந்து சமூகம் சீர்கெட்டுள்ளது. மேற்குறித்த சபையின் சமூகப்பணிகளைக் கண்டதும், இந்துக் கோவில்களிலும், இவ்வித தர்மங்கள் மீண்டும் எப்போது நடக்கப் போகின்றனவோ என்று எண்ணினேன். அவசிய சமூக தேவைகளை கோவில்களின் மூலம் பூர்த்திசெய்தால், மதமாற்றப் பிரச்னை கிளம்புமா?

* * *

படித்த நம் வாலிபர்களில் பலரும், கூலிக்காகவே தாங்கள் வேலைசெய்ய வேண்டுமென்று கருதி, "வேலையில்லை" என்று சும்மாவாக இருப்பார்களேயன்றி, சமூகசேவைக்காக, மக்கள் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள முன்வருபவர் எவ்வளவுபேர்?

இந்துக்களும் மதமாற்றத்துக்கின்றி "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதை மறக்காமல் செய்ய எப்போது முன்வருவார்களோ, என்று பல பல எண்ணங்களும், அவ்விருவரையும் கண்டதும் என் உள்ளத்தில் எழுந்தன.

* * *

ஏழைகளும் நடுத்தரவகுப்பாரும் கூட்டாகவோ, தனியாகவோ, ரூ. 5000 க்கும், 10 ஆயிரத்துக்கும் இடையில் செய்யக்கூடிய "கைத்தொழில்களை" 'ஈழநாடு' மூலம் விரிவாக எழுதி அறிவித்தால், எல்லாருக்கும் உபயோகமாகவும், வேலையில்லாக் கஷ்டம் நீங்குவதாகவுமிருக்குமென்றும், இந்த உதவியைச் செய்யவேண்டுமென்றும், தெல்லிப்பழையைச் சேர்ந்த ஓர் அன்பர் எழுதுகிருர். இவ்விஷயமாக தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதும் கட்டுரைகளை, அன்புடன் வரவேற்கிருேம்.

* * *

நேற்று யாழ்ப்பாணம் அத்தியடியிலே ஒரு உபதபாற்கந்தோர் புதிதாகத் திறக்கப்பட்டது. இங்கு போஸ்ட்மாஸ்டர் ஓர் இளம்பெண்! தாம் இதை ஒரு சமூகசேவையாகவே மேற்கொண்டுள்ளதாகவும் பலரது ஒத்துழைப்பும் வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். சபாஷ்! நாம் எல்லாருமே நமது கடமைகளை, சமூகசேவைகளாகச் செய்தோமாயின் சமூகத்துக்கு எவ்வளவு நன்ருக இருக்கும்.

# அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் கூப்பனில் அதிர்ஷ்ட பரீட்சை?

## நிதி நெருக்கடி தீர்க்க புதிய திட்டம்

### இதனுல் ரூபாய் ஏழரைகோடி எதிர்பார்க்கப்படுகிறது

கொழும்பு, வியாழன்

நாட்டில் நிலவிவரும் நிதி நெருக்கடியைக் குறைக்கவும், வெளிநாட்டுச் செலவாணியைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும் கூப்பன்களுக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டு இழுத்து பரிசுகள் வழங்கப்படலாம் என நம்பப்படுகிறது.

'லோகநாதன் திட்டத்'தில் ஒன்ருன இத்திட்டத்தின் படி பகுதிக்குப் பகுதி (பெரும்பாலும் காரியாதிகாரி பகுதி ஒவ்வொன்றிலும்) மூன்று மாதத்திற்கு ஒரு முறை இச் சீட்டிழுப்பு நடைபெறும். மூன்று மாத காலத்திற்கிடையிலும் காரியாதிகாரி கந்தோரில் கொடுக்கப்பட்ட தனிக் கூப்பன் ஒவ்வொன்றிக்கும் பதிவிலக்கம் கொடுக்கப்படும். அந்தப் பதிவிலக்கங்களைக் கொண்ட சீட்டுகளுக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டமடையும் கூப்பன் சொந்தக்காரருக்கு பரிசு வழங்கப்படும். கூப்பன்களை காரியாதிகாரியிடம் ஒப்படைக்கும் போது ஒருவர் குறைந்தபட்சம் 4 கூப்பன்களை (8 கொத்து அரிசிக்குபெறுமதியானதை) யாகுதல்கொடுக்க வேண்டும். காரியாதிகாரியிடம் கொடுக்கப்படும் கூப்பன்கள் வெட்டப்படும், இவைகள் பின்னர் செல்லுபடியாகாது.

நான்கு தனிக் கூப்பன்களுக்கு (அதாவது 8 கொத்து அரிசிக்கும்) அரசாங்கம் ஒரு ரூபா எண்பதினலு சதம் மான்யம் வழங்குகிறது. கூப்பன்களை சேகரித்து அதிர்ஷ்டம் இழுப்பதால் இந்த மான்யப் பணம் மிச்சமாகின்றது. இத்திட்டத்தினல் ஒரு குறிப்பிட்ட பகுதியே பரிசாக அளிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தினல் பெருந்தொகையான பணம் அரசாங்கத்திற்கு மிச்சமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பில் பரிசு பெறுவோரிடமிருந்து பரிசுக்கான வருமானவரி வசூலிக்கப்படமாட்டாது. கூப்பன்களுக்கான பதிவு இலக்கங்கள் 'பிளாஸ்டி'க்கல் செய்யப்பட்டிருக்கும். இச் சீட்டிழுப்பை நடத்தும் பொறுப்பு அரசாங்க அதிபருக்கும், அந்தப் பகுதி காரியாதிகாரிக்கும், உதவி பொலிஸ் சுப்றிண்டனுக்கும், அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட வேறு மூவருக்குமே உடையது. இச்சீட்டிழுப்பிற்கு வரும் கூப்பன்களுக்கு அரிசி வழங்காமல் விடுவதால் பெருந்தொகையான அரிசி மிச்சமாகும்; இதனுல் வெளிநாட்டுச் செலாவணி கட்டுப்படுத்தப்படும்; அரசாங்க மான்யம் குறையும்; தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி ஓரளவு குறையும். வழங்கப்பட்டுள்ள கூப்பன்களில் மூன்றில் ஒரு பகுதி சமர்ப்பிக்கப்பட்டாலும் 750 லட்சம் ரூபா மிச்சமாகுமென மதிப்பிடப்படுகிறது. இதில் 150 லட்சம் ரூபா வரை பரிசுக்காக ஒதுக்கப்படும்.

பகுதிச் சீட்டிழுப்பில் 250 ரூபாவரை பரிசளிக்கப்படுவதுடன் அவர்கள் மத்திய சீட்டிழுப்பில் பங்குபற்றவும் தகுதியுடையவர்களாவார்கள். மத்திய சீட்டிழுப்பில் பரிசு பெறுவோருக்கு 5,000 ரூபா தொடக்கம் 100,000 ரூபா வரையான பரிசுகள் வழங்கப்படும்.

---

## வியட்னமுக்கு யூ.எஸ்.யுத்தக் கப்பல்

வாஷிங்டன்பெப் .14

ஐந்து புதிய யுத்தக் கப்பல்களை அமெரிக்கா நாளை வியட்னும் கடற்படைக்கு கொடுத்துதவும். இதைத் தொடர்ந்து மேலும் 17 அமெரிக்க யுத்தக் கப்பல்கள் வியட்னும் கடற்படைக்குக் கிடைக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## பட்டினியால் குழந்தைகள் மரணம்

### ஐ. நா. அறிக்கை

நியுயோர்க், பெப். 14

உலகின் சில பகுதிகளில் பிறக்கும் குழந்தைகளில் பாதிக் குழந்தைகள், முதல் வருடத்துக்குள்ளேயே பட்டினியால் வாடி மரணமடைகிருர்கள் என்று ஐ. நா. அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் பிறக்கும் குழந்தைகளுல், ஒரு தொகையினர் வறுமையினுல் வாடி மரணமாகிருர்கள் என்றும் மற்றத் தொகையினர், பெலவீனமுடன் வளர்க்கிருர்களென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

---

## உதவ முடியுமா?

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 8-2-63 வெள்ளிக்கிழமை வந்த மெயில்வண்டியில் அனுரதபுரத்திற்கும் கொடிகாமத்திற்குமிடையில் ஒரு சூட்கேஸ் காணுமற்போய் விட்டது. அதனுள் எஸ். நமசிவாயம் என்னும் பெயருடைய ஆசிரியருக்குச் சொந்தமான எஸ். எஸ். ஸி. தராதரப்பத்திரம் (தமிழ்) மற்றிக்குலேஷன் தராதரப்பத்திரம், பிறப்புச் சாட்சிப்பத்திரம் ஆசிரிய நியமனப்பத்திரம், பல தற்சாட்சிப் பத்திரங்கள், இன்னும் பலகஸ்தாவேஜுகள் கொண்ட பயிலும், பார்ஸலும் இருந்தன. எல்லா தஸ்தாவேஜுகளிலும் எஸ. நமசிவாயம் என்ற பெயரோ வ/கோயிற்புதுக்குளம் கணேச வித்தியாசாலை என்ற பாடசாலை விலாசமோ காணப்படும்.

சு. நமசிவாயம் ஆசிரியர், கருகம்பானை, காங்கேசன்துறை என்ற விலாசத்திற்கு இது பற்றித் தெரிவிக்குமாறு கோரப்படுகிறது.

---

## உப தபாற்கந்தோர் திறப்புவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

"இந்த அரசாங்கம் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று கூறுவது சரியல்ல. சிங்களவருக்குப் போல் தமிழர்களுக்கும் ஜனத்தொகை ரீதியின்படி செய்ய வேண்டிய உதவிகளை இந்த அரசாங்கம் செய்து வருகிறது. இனிமேலும் உங்களுக்குத் தேவையானவற்றை நான் இந்த அரசாங்கத்திடமிருந்து பெற்றுததருவேன்" என்று இன்று காலை அத்தியடி உப தபாற்கந்தோரைத் திறந்து வைத்தபோது யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா கூறினர்.

யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் அதிபர் திரு. பி. விநாயகம் தபாற்கந்தோரில் மூதல் விற்பனையை அரம்பித்து வைத்தார்.

---

கல்கத்தா, பெப். 14

இந்தியாவுக்கு விஜயம் செய்த கிரீஸ் மன்னர் தம்பதிகள் இன்று கலகத்தாவிலிருந்து பாங்ஹாககுப பயணமானுர்கள்.

---

## நெற்றிக் கண்!

### மதுரையில் அதிசயம்

மதுரை, பெப். 14

மதுரையிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 30 வயதுள்ள ஒரு பெண்ணுக்கு, ஒரு கண் உள்ள குழந்தையொன்று பிறந்துள்ளது!

பிறந்த இந்த ஆண்குழந்தையின் நெற்றியின் நடுவில் ஒரே ஒரு கண் இருக்கிறது. மூக்கில்லை. வாய் வழியாக இக்குழந்தை மூச்சுவிடுகிறது!

---

## கிராமதானம்: நமக்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முடையவர் நினைத்தால் அதை விற்றுவிடுவார். நிலத்தை விற்பதற்கும் நாட்டை விற்பதற்கும் என்ன வித்தியாசம்? நாளைய தினம், நாம் அமெரிக்காவினிடமிருந்தும் இங்கிலாந்தினிடமிருந்தும் உதவியை வேண்டிப் பெற்ருேம். அதற்குப் பதிலாக வங்காளத்தை அவர்களுக்குக் கொடுத்தோமென்ருல் என்னவாகும்? இது நாட்டை விற்பது போன்றது தானே? இதுதான் இப்போது கிராமங்தோறும் நடந்து வருகிறது. கிராமங்களிலுள்ள நில முதலாளிகள் நாட்டைத்தான் விற்றுக்கொண்டிருக்கிருர்கள். கிராமத்திலுள்ள நிலத்தை விற்பதற்கும் ஒரு பிரதேசத்தை விற்பதற்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை. மீர்ஜாபர் தான் பெற்ற உதவிக்காக வங்காளத்தைவிற்ருன். நாம் அவனைத் தேசத் துரோகி என்கிருேம். நிலத்தை விற்பதும் நாட்டிற்குத் துரோகம் செய்தலேயாகும். முதலாளித்துவம் இதை அனுமதிக்கிறது. இதற்கு உரிமை வேண்டுமென்கிறது. அது உடைமையில் உரிமை வேண்டுமென்பதற்கு இது தான் அர்த்தம். ஆனல் பொது உடைமையோ எல்லா சொத்தும், எல்லா நிலங்களும் அரசாங்கத்தினுடையதாய் ஆகிவிட வேண்டும் என்கிறது. அப்போது என்னவாகும்? மக்கள் அனைவரும் அடிமைகள் போலாகிவிடுவார்கள். முதலாளித்துவம் ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்தத்தில் உரிமை வேண்டுமென்று சொல்ல, பொதுவுடமையோ சொத்தெல்லாம் அரசாங்கத்தினுடையது என்கிறது. இந்த இரண்டு ஏற்பாடுகளுமே இருவகைகளில் ஆபத்தானவையாய் இருப்பதால் நான் இவை இரண்டும் வேண்டாம், கிராமத்தின் நிலம் முழுவதையும் கிராமப் பொது வாக்கிவிடுவோம் என்கிறேன். இது நம் நாட்டிற்கே உரிய ஒரு சிறப்பான ஏற்பாடாய் இருக்கும். இது இங்கே நடைபெறுமாஞல் பிறநாடுகளும் இதைப் பின்பற்றும். இந்தியாவின் புகழ் உலகில் ஓங்கும்.

---

## மாணவர்களின் தேகநிலை

### தளபதி அதிருப்தி

சென்னை, பெப். 14

இந்தியா முழுவதிலும் மாணவர்கள் பொதுவாக மோசமான தேகக்கூறு உடையவர்களாகவே தான் இருக்கிருர்கள் என்று இந்தியக் கடற்படைத் தளபதி திரு. பி. எஸ். சோமன், பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறினர்.

மாலை நேரங்களில் மாணவர்கள், கிழவர்கள் போல் உலாவச் செல்கிருர்கள். விளையாட்டு மைதானங்கள் யாவும் வெறிச்சென்று கிடக்கின்றன. பல மாணவர்கள் வீண் பொழுது போக்குகிருர்கள். இப்பொழுது மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி கட்டாயமாக்கபபட்டிருப்பதால், பொதுவாக அவர்களின் தேகக்கூறு அபிவிருத்தியடையும் என்றும் அவர் கூறினர்.

---

# தமிழினத்தை பிளவுபடுத்த வேண்டாம்

## அமிர்தலிங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

'1956-ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்பேசும் மக்களிடையே உண்டான ஒற்றுமையைக் குலைக்க ஒரு சிலர் முனைந்துள்ளனர். இழந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒன்றுபட்டுள்ள தமிழ் இனத்தைப் பிளவுபடுத்த முயற்சிப்பவர்களின் செயல்களை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும்' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் மாவிட்டபுரத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வீதியில் நேற்றிரவு நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்திற்கு சிவஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் தலைமைவகித்தார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழ் பேசும் மக்கள் தமக்கு உரிமைமறுக்கும் எந்த அரசாங்கத்தையும் எதிர்க்க ஒன்ருக இணைந்தனர். 1956-ம் ஆண்டிற்குப் பின்னர் இந்த விஷயமாக எந்தவிதமான கருத்து வேறுபாடும் தோற்றவில்லை.

தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகத்தின் பின் தமிழ் மக்களை பிளவுபடுத்தும் முயற்சி தலையெடுத்துள்ளது. இந்த முயற்சியில் சுலநலம் விரும்பும் சிலர் ஈடுபட்டிருப்பதும் வருந்தத்தக்கது. இந்த முயற்சிகள் மேலும் நீடிக்குமாஞல் தமிழ் இனம் எதிர்காலத்தில் அடக்கியொடுக்கப்பட்டுவிடும். இம்முயற்சிகளை முறிடிக்க நாமனைவரும் உறுதிபூணவேண்டும்.

தமிழ் மக்களை அவர்களிற் சிலரைக் கொண்டே காட்டிக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நோக்கத்துடன்தான் நம்மில் சிலர் சிங்கள அரசாங்கத்தின் மந்திரிகளை தமிழ்ப் பகுதிகளுக்கு அழைத்து வருகின்றனர். இத்தகையோரின் செயல்களால் தமிழினத்தின் கோடரிக் காம்புகள் தோன்ற இடமுண்டு. இக்கோடரிக் காம்புகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும். இல்லையானல் நமது எதிர்காலம் இருள்சூழ்ந்ததாகிவிடும்.

தமிழ் இன மக்களிடையே உருவாக்கப்படும் பிளவுகளை உடனடியாக அகற்றிவிட வேண்டும்.

பிளவு மனப்பான்மை அதிகரிப்பதினல் நாம் நமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வது முயற்கொம்பாகிவிடும். எமது பிரிவினைச் சக்திகளை அகற்றி தமிழின் உரிமைக்காகப் போராடவேண்டும்.

காங்கேசன்துறை எம். பியும் தமிழரசுத் தந்தையுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயம் பேசுகையில் கூறியதாவது:-

எமது உரிமைகளை மறுக்கும் எந்த அரசாங்கத்தினதும் மந்திரிகள் தமிழ்ப்பகுதிகளுக்கு வந்தால் நாம் கறுப்புக்கொடி காட்டியே தீருவோம். தமிழ் பேசும் இனம் தனக்குரிய உரிமைகளை மறுக்கப்பட்ட நிலையிலே இன்று அல்லற்படுகிறது. எமது கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காத அரசாங்கத்திற்கு நாம் நமது எதிர்ப்பை அமைதியான முறையில் தெரிவிக்கவேண்டும். இந்த நோக்கத்துடன் தமிழரசுக் கட்சி மந்திரிகளுக்கு கறுப்புக் கொடி காட்டத் தயாராக உள்ளது.

மற்றும் பலர் பேசினர்.

---

# 'அந்நியர் தலையீட்டை ஈராக் விரும்பவில்லை'

## நிருபர்களிடம் புதிய அமைச்சர் அறிவிப்பு

பாக்தாத், பெப். 14

உள்நாட்டு விவகாரங்களில் அந்நியர்கள் தலையிடுவதை, ஈராக்கின் புதிய அரசாங்கம் அனுமதிக்காதென்று ஈராக் புதிய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை நிருபர்களுக்கு வெளிவிவகார அமைச்சர் அளித்த பேட்டியொன்றில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் சம்பந்தமாக நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் பதிலளிக்கையில், முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டிருக்கிருர்களென்றும் இப்பொழுது அவர்கள் விசாரணை செய்யப்படுகிருர்கள் என்றும் கூறினர்.

விசாரணை முடிவில், அவர்கள் குற்றவாளிகளாகக் காண பட்டால், நீதிமன்றத்துக்கு முன்னர் நிறுத்தப்படுவார்கள். குற்றவாளிகளில்லாதவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறினர்.

ஈராக்கின் புரட்சியின் போது எத்தனை பேர் மரணமடைந்தனர் என்று நிருபர் ஒருவர் கேட்ட பொழுது மரணமானவர்களின் தொகை பெரிய தொகையில்லையென்றும் குறைவான தொகையானோர் மரணமாகியிருக்கிருர்கள் என்றும் அமைச்சர் கூறினர்.

---

## வேலையில் துரிதமில்லை

கொழும்பு, வியாழன்

இ. போ. ச வின் வெரகரையிலுள்ள தொழிற்சாலையில் வேலை மிகவும் தாமதமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இதனுல் உதிரிப் பாகங்கள் தேவையான டிப்போக்களுக்கு அவை நேரத்திற்கு வந்தபாடில்லை உதிரிப்பாகங்கள் தேவையான டிப்போக்கள், வேண்டிய உதிரிப்பாகங்கள் இல்லாததால் சேவையை திறம்பட நடத்த முடியாமல் கஷ்டப்படுகின்றன.

அண்மையில் நடைபெற்ற 17 நாள் வேலை நிறுத்தத்தின் பின்னர் வேலைக்குத் திரும்பிய வெரகரை டிப்போ தொழிலர்ளர்கள் வேலைகளை துரிதமாகக் கவனித்து வரவில்லை. இவ்வித நடவடிக்கை தொழிற்சங்கம் எதனுலும் தூண்டப்படவில்லை என்றும் தொழிலாளர்களே தமாகச் செய்கிருர்கள் என்ற கருத்து நிலவுகிறது.

---

## மிகப்பெரிய மின்சாரநிலைய

புதுடில்லி, பெப். 14

பீஹார் ராஜ்யத்தில் அலாரிபாப ஜில்லாவில், மிகப் பெரிய அனல் மின் சார நிலையமொன்று அமைக்கப்படவிருக்கிறது. மின்சார நிலையத்திற்கான அடிக்கல் இன்று நாட்டப்பட்டது.

# ‘20,000 ஆசிரியர்கள் திரட்டப்பட வேண்டும்’

## கிராமப்புற கல்விபற்றி டாக்டர் விக்கிரமசிங்கா

அக்குரஸ்ஸ, வியாழன்

“றோயல் கல்லூரியின் தரத்துக்கு கிராமப்புற பாடசாலைகளையும் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால் இது வெற்றியளிக்காது. கிராமப்புற பாடசாலைகளில் கல்விபயிலும் குழந்தைகளுக்கு நல்ல கல்வியளிக்கவேண்டுமென்றால், கல்வி இலாகா மேலும் சுமார் 20,000 ஆசிரியர்களைத் திரட்டவேண்டும்.”

அத்மலிய வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அக்குரஸ்ஸ எம். பி. டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பாடசாலைகளில் விஞ்ஞானம் போதிக்கப்படாவிட்டால், குழந்தைகளின் முன்னேற்றத்துக்குத் தடையேற்படும் என்றும், எதிர்காலத்தில் எமது குழந்தைகள் கல்வியறிவுடன் திகழ்வதற்கு இலங்கையிலுள்ள பாடசாலைகள் எல்லாவற்றிலும் விஞ்ஞானம் கற்பிக்கப்படவேண்டும் என்றும் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது: “விவசாயத்துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு விஞ்ஞானம் அவசியம் தேவை. ஆகையினால், குழந்தைகளுக்கு விஞ்ஞான அறிவு மிகவும் அவசியமாகும். கிராமப்புறக் குழந்தைகளுக்கு நல்ல கல்விவசதியளிக்கப்படவேண்டும். ஆனால், அரசாங்கம் கருதுவதுபோல், கிராமப்புற பாடசாலைகளை, றோயல்கல்லூரி தரத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்றால், கல்வி இலாகா, மேலும் 20,000 ஆசிரியர்களைத் திரட்டவேண்டும்.”

## டெலிபோன் கட்டணம்

### மோசடி செய்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் தபாற்கந்தோரில் வேலைசெய்யும் சிப்பந்தியான மாதகலைச் சேர்ந்த சூசை சேவியர் என்பவர் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான வீதியில் கடை வைத்துள்ள கந்தையா நல்லையா என்பவரிடம் டெலிபோன் கட்டணப் பணம் ஏமாற்றி வாங்க முயன்றதாக யாழ்ப்பாணப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் அரசுவால்டன் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

கந்தையா நல்லையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

“நான் காங்கேசன்துறை யாழ்ப்பாணம் வீதியில் 23-ம் நம்பர் கடையில் வியாபாரம் நடத்தி வருகின்றேன். எனது டெலிபோன் இலக்கம் 623. சென்ற மாதம்; கார்த்திகை மாதத்தில் நான் டெலிபோன் பணம் கட்டவில்லை. 57 ரூபா 95 சதம் கட்டவேண்டுமென்றும் பில்வந்தது. கடந்த வருடம் டிஸம்பர் மாதம் 29-ந் திகதி 4 1/2 மணியளவில் தபால் கந்தோரில் இருந்து ஏன் காசு கட்டவில்லை. என்று மூன்று முறை கேட்கப்பட்டதுடன் பணம் கட்டாவிட்டால் ‘லைனை’த் துண்டிக்கப் போவதாகவும் அறிவிக்கப்பட்டது. எவர் பேசியது என்று தெரியவில்லை.

நான் தபால் அதிகாரிக்கு டெலிபோன் செய்து உடன் பணம் கட்ட வேண்டுமா என்று கேட்டேன். அவர் திங்கட்கிழமை கட்டலாம் என்று சொன்னார்.

மாலை 6 மணியளவில் எதிரி தனது கடைக்கு வந்து தபாற்கந்தோரில் இருந்து வருவதாகவும் டெலிபோன் பணம் வசூலிக்க வந்ததாகவும் கூறினார். நான் அவரிடம் பில்லைக் காணவில்லை தேடி எடுத்துக்கொண்டு வருவதாகக் கூறி அவரைத் தாமதிக்கச் செய்து தபால் அதிகாரிக்கு விஷயத்தைத் தெரிவித்தேன். அவர் சிறிது தாமதிக்கச் செய்யும்படி கூறினார். ஒரு நிமிடத்தில் பொலிசார் வந்து எதிரியைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.’

இந் நிலையில் மேல் விசாரணை மார்ச் 6-ந் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. எதிரி தரப்பில் திரு. டி. சண்முகலிங்கம் திரு ஆர்.ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஜோகரன் வழக்கை நடத்தினார்.

## மாணவர் கஷ்டம்; பெற்றோர் கவலை

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை பலகாலமாகப் பாதிக் கூரையின் கீழ் நடைபெற்றுவருகிறது. மழைபெய்தால் மாணவர்கள் பள்ளிக்கூடத்துள் ஒதுங்கவும் இடமின்றித் தவிக்கின்றனர். வெயில் காலத்திலும் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். இது பற்றிப் பலமுறை கல்விப் பகுதியாருக்கு எழுதியும் இதுவரை அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். இதுகுறித்து இப்பாடசாலை மாணவரின் பெற்றோர் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர்.

## மயானத்தை அகற்ற கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

ஊர்காவற்றுறையில் மெலிஞ்சிமுனை என்னுமிடத்திலுள்ள குடியேற்றத் திட்டத்துக்கு அருகாமையிலுள்ள மயானத்தை அங்கிருந்து வேறு இடத்துக்கு அகற்றவேண்டுமென குடியிருப்பாளர்கள் கோரியுள்ளனர்.

மழைகாலத்தில் இந்த மயானத்தில் பிரேதங்கள் முற்றாக எரியாமல் பாதியுடன் நனைந்துவிடுவதால் அப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும், இந்த மயானத்தினால் சுகாதாரத்துக்கு கேடு நேரக்கூடுமென்றும் எனவே இந்த மயானத்தை அங்கிருந்து அகற்றிவிட வேண்டுமென்றும் அவர்கள் கேட்கின்றனர்.

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு வே. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. ஆலய வளர்ச்சிபற்றிப் பலரும் பேசினர்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. க. பொன்னம்பலம், உப-தலைவர்: திரு. சி. சிவகுரு, காரியதரிசி: திரு. வ. கந்தையா, தனாதிகாரி திரு. கு. தாமோதரம்பிள்ளை.

நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## திருமலை செய்திகள்

### புதுவருட நிர்வாகிகள்

திருமலை, வியாழன்

சாம்பல்தீவு சித்திவிநாயகர் இளைஞர் விவசாயக் கழகவருடாந்தப் பொதுக்கூட்டம் திருக்கோணமலை மாவட்ட விவசாய உத்தியோகஸ்தர் திரு. எஸ். நடராசா தலைமையில் நடைபெற்றது புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வ. சந்திரசேகரம். உபதலைவர்: செ. கல்யாணி. செயலாளர்: த. சண்முகநாதன், உப செயலாளர்: சு. லிங்கரட்னம். பொருளாளர்: திரு. க. சின்னராசா. கணக்குப் பரிசோதகர்: திரு. நடராசா சுப்பிரமணியம்.

∴ ∴ ∴

### மகஜர்

திருமலை, வியாழன்

முனியச்சேனைப் பகுதியில் உள்ள மக்கள் தங்களுக்கென ஓர் தனி ஆஸ்பத்திரியை அமைத்துத் தருமாறு மூதூர் எம். பி.க்களைக்கோரும் ஓர் மகஜரை தயாரித்துள்ளனர். அவ் விண்ணப்பத்தில் 300 பேர்வரை கையொப்பமிட்டுள்ளனர். இதை இங்குள்ள இஸ்லாமிய இளைஞர்கள் கழகம் தயாரித்துள்ளது.

∴ ∴ ∴

### விஜயம்

திருமலை, வியாழன்

வெள்ளைமணல் அரசினர் முஸ்லிம் சிங்களக்கலவன் பாடசாலைக்கு மூதூர் முதல் எம். பி.யும், தமிழரசுப் பிரதிநிதியுமான ஜனாப் எம். ஈ. எச். முகமதலி விஜயம்செய்தார். மேற்படி பாடசாலைத் தலைவர் ஜனாப் இபுராகிம் எம். பியை வரவேற்று பாடசாலையில் தளபாடங்கள் குறைவாக இருக்கிறதால் அதுபற்றி விரைவில் ஆவனசெய்யும்படி கேட்டுக்கொண்டார்.

விரைவில் தளபாடச்சாமான்கள் கிடைக்க வழிசெய்வதாகவும் எம். பி வாக்குறுதியளித்தார்.

∴ ∴ ∴

### அறிவுரை

திருமலை, வியாழன்

“கிராமத்திலுள்ள ஊழல்களை ஒழிப்பதற்காகவே கிராமத் தலைவர்முறையை முற்றாக நீக்கி கிராம சேவையாளர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. நீங்கள் சேவை, சமுதாய மனப்பான்மையுடன் கடமையுணர்ச்சி உள்ளவர்களாகவும் நாட்டிற்கு சேவைசெய்ய வேண்டும். லஞ்சம் வாங்குவதில் நீங்கள் அறவே ஈடுபடக்கூடாது. அப்படியீடுபட்டால் நீங்கள் உங்கள் பதவியை இழக்கவேண்டும்.”

இவ்வாறு கொட்டியாரப் புரப் பகுதில் கிராமசேவையாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு பயிற்சியை ஆரம்பித்துவைத்துப் பேசிய மூதூர் டி. ஆர். ஓ. திரு. செல்வரத்தினம் கூறினார்.

∴ ∴ ∴

### திருட்டு

திருமலை, வியாழன்

கிண்ணியாவைச் சேர்ந்த அக்பர் என்பவருடைய இல்லத்தில் சுமார் 300 ரூபாய் பெறுமதியுள்ள துணிகள் களவாடப்பட்டுள்ளன. இதுபற்றி பொலிசாரிடம் அவர் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் புலன்விசாரணை செய்துவருவதாகவும் தெரியவருகிறது.

# பிரதமருக்கும் அரசாங்கத்துக்கும் பாராட்டு

## மாதத்தில் ஒருநாள் சம்பளம் நன்கொடை

கொழும்பு, வியாழன்

அமெரிக்கரின் உரிமை சலுகைகளைக் காப்பாற்றுவதற்கு அமெரிக்க அரசாங்கம் எவ்வளவு கடமைப்பட்டுள்ளதோ அதே போல இலங்கை அரசாங்கத்துக்கும் தனது தேசிய சுதந்திரத்தை காப்பாற்றுவதில் அவ்வளவு பொறுப்பும் கடமையும்உண்டு எண்ணெய்க் கம்பனிகளுக்கு நஷ்டஈடு வழங்கும் விஷயத்தில் நீங்களும் உங்கள் அரசாங்கமும் இவ்வளவு உறுதியுடன் கடமையாற்றியதற்காக நாம் உங்களைப் பாராட்டுகிறோம்.

இவ்வாறு அகில இலங்கை தாதிமார் சங்கம் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. அமெரிக்கா தனது பொருளாதார உதவி நிறுத்திவிடப் போவதாக அறிவித்த போதிலும் அரசாங்கம் தமது கொள்கையில் நின்றுமாறாது குறித்து அச்செய்தியில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏற்படும் எந்தப் பிரச்னைகளையும் தீர்ப்பதில் அரசாங்கத்திற்கு தமது சங்கம் உதவி செய்யத் தயாராயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நம் நாட்டின் சுயமரியாதையையும், மதிப்பையும், தேசிய கௌரவத்தையும் பாதுகாப்பதில் நீங்கள் காட்டிய தளராத-உறுதியான மனப்பான்மையை, சுதந்திரத்தை விரும்பும் இந்நாட்டு மக்கள் எல்லோரும் வரவேற்பார்களென்றே எமது சங்கம் நம்புகின்றது. தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து காப்பாற்றி வரும் சுயமரியாதையை ஒருசில பொருளாதார உதவிகளுக்காக விற்றுவிட முடியாது. அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஏற்படும் பொருளாதாரப்பிரச்னைகளைத் தீர்க்கும் பொருட்டு 2,000 பேர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட எமது சங்கம் ஒரு நாள் சம்பளத்தை கொடுக்க முன் வந்துள்ளது. இப்பணம் அப்பிரச்னைக்கு முற்றிலும் போதாவிட்டாலும் மற்றவர்களுக்கு இது ஒரு படிப்பினையாக இருக்க வேண்டுமென்பதே எங்கள் சங்கத்தின் ஆவல்.

### எண்ணெய்க் கம்பனி ஊழியர் அன்பளிப்பு

இலங்கையில் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மாத்தறைக் கிளை ஊழியர்களும், உத்தியோகஸ்தர்களும் தங்கள் ஒரு நாள் சம்பளத்தை மாதந்தோறும் அரசாங்கத்திற்கு அன்பளிப்பதென முடிவு செய்தனர். அமெரிக்க எண்ணெய்க்கம்பனிகளுக்கு நஷ்டஈடு கொடுக்க மறுத்ததைத் தொடர்ந்து அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கான பொருளாதார உதவியை நிறுத்துவதென்று முடிவு செய்ததை சமாளிக்கும் பொருட்டே தாம் இவ்விதம் செய்வதாக அவர்கள் அறிவித்தனர். இப் பிரேரணை தொழிற் சங்கத்திற்கு அனுப்பிவைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டதால்ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிவர்த்தியாகும் வரையில் இவர்கள் மாதந்தோறும் ஒரு நாள் சம்பளத்தை அரசாங்கத்திற்கு கொடுப்பதாக முடிவு செய்துள்ளனர்.

### இடமாற்றம்

திருமலை, வியாழன்

பிட்டவெட்டு அரசினர்பாடசாலையில் கடமையாற்றிய மௌலவி ஜனாப அபதுல்ஹக்குச்சமிலவி முஸ்லிம் பாடசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## பௌத்த காங்கிரஸ் கோரிக்கை

### மந்திரிக்கு எம். பி. கடிதம்

திருக்கோணமலை, பெப். 14

“இலங்கை பௌத்த காங்கிரஸ், புராதன பௌத்த தலங்கள் இருக்கும் பகுதிகளில் பௌத்த சமயத்தவர்களை மட்டும் குடியேற்ற வேண்டும் என காணி அமைச்சருக்கு விடுத்த கோரிக்கையை காணி அமைச்சர் ஏற்பாரானால் சிறுபான்மையினரின் உரிமையான நிலங்களை பெரும்பான்மையினருக்கு வழங்குவதாக சிறுபான்மையினத்தவர் கருதுவர்” என்று திருமலை எம். பி. திரு. இராஜவரோதயம், காணி அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாவிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## இசைக் கலைஞர்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், வியாழன்

ஏப்ரல் மாதத்தில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் நல்லூரில் நடாத்தவிருக்கும் தமிழிசை விழாவில் இரண்டு கலைஞர்களுக்கு நிதியுதவி செய்வதற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

குப்பிளான் எஸ். செல்வத்துரையும், சென்ற ஆண்டில் இயற்கையெய்திய நாதசுர வித்துவான் எஸ். பி. எம். திருநாவுக்கரசுப்பிள்ளையின் மனைவியாரும் இவ்வுதவியைப் பெறுவார்கள். அபிமானிகள் வழங்கும் நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப் படுமென மன்றச் செயலாளர் திரு ஆ. நமசிவாயம் தெரிவிக்கின்றார்.

## பிரிவுபசார விழா

பருத்தித்துறை, திங்கள்

மருதங்கேணி சண்முக வித்தியாசாலை தலைமையாசிரியர் திரு. க. குமாரசுவாமி கைதடி நுணாவில் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டும் பாடசாலை ஆங்கில ஆசிரியர் திரு. வி சேதுநாயகம் கிராமசேவையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பதை முன்னிட்டும் இரு ஆசிரியர்களுக்கும் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் பிரிவுபசார விழா ஒன்றை நடாத்தினர்.

பாராளுமன்றப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப் பிரிவுபசார விழாவில் பலர் அவர்களின் சேவைகளைப் பாராட்டிப் பேசியதுடன் தேநீர் விருந்தும் அளித்துக் கௌரவித்தனர்.

## அராலி கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வியாழன்

அராலி வாலையம்மன் கோயிலில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் திகதி அராலியைச் சேர்ந்த நல்லையா பேரம்பலம் என்பவரைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த அப்பாக்குட்டி பாலசிங்கம் அப்பாக்குட்டி அன்னலிங்கம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக் கெடுத்து கொள்ளப்பட்டது.

நல்லையா மனைவி நல்லபிள்ளை, பொன்னம்பலம் பாலேந்திரன் ஆகியோர் சாட்சியமளித்தனர். மாஜிஸ்டிரேட் மேல் விசாரணையை இம்மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# 'வில்மட் பெரேரா சம்பளக் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்துக'

## பிரதமருக்கு தமிழாசிரியர் சங்கம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, வியாழன்

வில்மட்பெரேரா சம்பளக் கமிஷன் அறிக்கையை உடன் அமுல் செய்வதன்மூலம் சுயமொழி ஆசிரியர்களுக்கு நீதி வழங்கவேண்டுமென இச் சங்கம் கௌரவ பிரதமமந்திரியையும், கௌரவ நிதிமந்திரியையும் கேட்டுக்கொள்கிறது.

மட்டக்களப்புத் தமிழாசிரியர் சங்க மூன்ருவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மேற்கண்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. திரு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்தில் அ. இ. த. ஆ. சங்கப் பொதுக் காரியதரிசி திரு. எம். சிவநேசராசா விசேஷ பேச்சாளராகக் கலந்து உரை நிகழ்த்தினர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் முக்கிய தீர்மானங்கள் சில வருமாறு:

எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் மாணவர்களில் ஒரு பகுதியினரையாவது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்கு எடுக்க வேண்டும் என இச்சங்கம் தாய்ச்சங்கத்தினூடாகக் கௌரவ கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்கிறது.

தமிழ் ஆசிரியர்களின் சம்பளப்படியேற்றம், சேவைநீடிப்பு இவைகளுக்கு உத்தியோக மொழி அறிவு கவனிக்கப்படக் கூடாதென இச்சங்கம் கௌரவ கல்வி மந்திரியவர்களைக் கேட்கின்றது.

பாடசாலைகளைச் சுவீகரிக்கு முன்பு ஆசிரியர்களுக்கிருந்த அரசியல் உரிமைகளை மீண்டும் வழங்குமாறு கௌரவ பிரதம மந்திரியையும், கௌரவ கல்வி மந்திரியையும் இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

1-12-60-ல் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களை அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களுடன் சேவை மூப்பு அட்டவணையில் சேர்க்கும்வரை சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளிலிருந்து அரசாங்கப் பாடசாலைகளுக்கும், அரசாங்கப் பாடசாலைகளிலிருந்து சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களை மாற்றக் கூடாதென அ. இ. த. ஆ. சங்கத்தின் கொள்கையினை இச்சங்கம் ஆதரிக்கின்றது.

## தமிழிசை விழா

யாழ்ப்பாணம், வியாழன்

அண்ணமலை இசைத் தமிழ் மன்றத் தமிழிசைவிழா ஏப்ரல் முற்பகுதியில் நல்லூரில் மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மன்றத்தின் இசைக்கல்லூரி பெற்ருர் தின வைபவங்களும் வித்துவான்களின் கச்சேரிகள், வாத்தியக் கோஷ்டி நிகழ்ச்சிகள், இரண்டு கலைஞர்களுக்குப் பொற்கிளி வழங்கல் ஆகிய பல நிகழ்ச்சிகளும் இடம் பெறுமெனத் தெரிய வருகிறது.

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையக் கூட்டம் அதன் தலைவர் திரு. த. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

நிலையத்தின் 14-ம் ஆண்டு விழாவை சித்திரா பூரணையிலன்று விளையாட்டுப் போட்டிகளுடன் நடத்துவதென்றும் அன்று இரவு நாடகம் ஒன்றை நடத்துவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 15-2-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 முத்துலட்சுமி குழந்தைவேல் — பக்திப்பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 ஞானஞ்சலி, 7-30 நேயர்விருப்பம். 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி. 9-15 விமர்சனங்கள், 9-30 ரி. ராஜலிங்கம் — பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 இசைக்கோவை — நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி அஞ்சலி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பொங்கி எழும் பாரதம் — சித்திரம், 7-45 ஜி. என். பாலசுப்பிரமணியம் — பாட்டு, 9-15 பலசுணி, 9-30 மெல்லிசை, 9-45 இசைமாலை, 9-55 வெற்றிப்பாதையில் : சித்திரம்.

## விபூதியும் சந்தனமும் நீதியைத் திருப்புமா?

யாழ்ப்பாணம், வியாழன்

"நெற்றியில் விபூதி அணிந்து சந்தனப்பொட்டும் இடுவது இந்நாளில் ஒரு நாகரிகமா? என்று நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணை முடிவில் குறிப்பிட்டார்.

இரண்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட வேறு மதத்தைச் சேர்ந்த இரண்டு எதிரிகள் அசல் சைவசமயத்தவர் போல் விபூதி சந்தனம் அணிந்து காட்சியளித்தபோதே நீதியரசர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அடுத்தடுத்து இரண்டு எதிரிகளும் இவ்விதம் நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததைக் கண்ட நீதியரசர், இந்த வெளி வேஷத்தின்மூலம் தீர்ப்பளிப்பதில் எனது மனதை மாற்றி விடமுடியாது. சட்டத்தைக் கொண்டே நான் தீர்ப்பு வழங்குவேன்" என்று கூறினர்

## கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழ்மக்கள் தமது மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றுக்காகப் போராட வேண்டியவர்களாக இருக்கின்றனர். தவருன தலைமையே தமிழ்மக்களின் அவதிக்குக் காரணமாகும்' என்று திரு. கே. ஏ. சுப்பிரமணியம் சாவகச்சேரியில் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம்—பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையிற் குறிப்பிட்டதாவது:

"வளர்ந்துவரும் இடதுசாரி இயக்கம் தனது அடிப்படைக் கொள்கையாக சோஷலிஸத்தையும் சமாதானத்தையும் கொண்டுள்ளது. நாமும் அந்த இயக்கத்துடன் இணைந்து போராடுவதன்மூலமே எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். சோஷலிசம் தனது அடிப்படை இலட்சியமாக சமூக, இன, மொழி உயர்வு தாழ்வுகளை அடியோடு வெறுக்கிறது. பண்பாடு கலை, கலாச்சாரத்தைப் பேணி பாதுகாக்கவேண்டும். பொருளாதார சுதந்திரத்தை ஏற்படுத்தும்போது எமது பிரதேச உரிமைப் போராட்டங்களையும் சோஷலிஸம் ஒரே வடிவில் உள்ளடக்கியிருப்பதனல் சோஷலிஸத்திற்காகப் போராட வேண்டும்.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். மூர்த்தி

## வியாசப்போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, வியாழன்

வடமராட்சி ஆங்கில ஆசிரியர் சங்கத்தாரால் நடாத்தப்பட்ட வியாசப்போட்டிகளில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவர்கள் ஆங்கிலத்தில் மூன்று பிரிவிலும் முதல் இரு ஸ்தானங்களையும் பெற்றுள்ளனர். இரண்டாவது பிரிவில் மூன்று ஸ்தானங்களையும் சுவீகரித்துக்கொண்டனர்.

ஹாட்லிக்கல்லூரி தமிழ்ப் போட்டியிலும் 2-ம் பிரிவில் முதலாவது ஸ்தானத்தையும் மூன்ரும் பிரிவில் முதல் இரண்டு ஸ்தானங்களையும் பெற்றுள்ளது. போட்டி முடிவுகள் வருமாறு:-

### ஆங்கிலம் மேற்பிரிவு

ஜி. பாலசிங்கம் - ஹாட்லிக் கல்லூரி, ஆர். மகாதேவா - ஹாடலிக்கல்லூரி, கே. பாலேந்திரா - சிதம்பராக்கல்லூரி.

### மத்தியபிரிவு

வி. நவரத்தினம் - ஹாட்லிக் கல்லூரி, வி. குணநாதன் - ஹாடலிக்கல்லூரி, கே. சிவகுமாரன் - ஹாட்லிக்கல்லூரி.

### கீழ்ப்பிரிவு

வி. வசந்தகுமார் - ஹாட்லிக் கல்லூரி, எஸ். ஆனந்தன் - ஹாட்லிக்கல்லூரி, ச. சரோஜா சத்தியராஜ - மெதடிஸ் கல்லூரி.

### தமிழ் மேற்பிரிவு

சுகிர்தலோஜனி தர்மலிங்கம் - மெதடிஸ்கல்லூரி, சரோஜினி தாமோதரம்பிள்ளை - மெதடிஸ்கல்லூரி, எம். இராஜேஸ்வரி - சிதம்பராகக்கல்லூரி.

### மத்தியபிரிவு

வி. குணநாதன் - ஹாட்லிக் கல்லூரி, சுசிலா சுப்பிரமணியம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, எஸ். சிவபாதம் - தேவரையாளி இந்துக்கல்லூரி.

### கீழ்ப்பிரிவு

வி. கே. இராமச்சந்திரன் - ஹாட்லிக்கல்லூரி, வி. சேந்தன் - ஹாட்லிக்கல்லூரி, வி. மீனலோஜனி - சிதம்பராக்கல்லூரி.

## வாசிகசாலை ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

அரியாலை அருணோதய வாசிகசாலை 3-வது ஆண்டு நிறைவுவிழா வாசிகசாலைமண்டபத்தில் தலைவர் திரு பொ பரணன் தலைமையில் நடைபெற்றது.

"வாசிகசாலையில் இளைஞர்களின் பங்கு" என்பது பற்றி திரு .ச. சதாசிவமும், "வாசிகசாலையும் முதியோரும்" என்பதுபற்றி திரு க. சுப்பிரமணியமும் சொற்பொழிவாற்றினர்கள்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. ச. சதாசிவம், உப-தலைவர் திரு. மு. சீவரத்தினம், காரியதரிசி திரு. ப. கணபதிப்பிள்ளை, உப- காரியதரிசி திரு. மு. ஐயாத்துரை, தனதிகாரி திரு. சி. பரமலிங்கம், கணக்குப்பரிசோதகர் திரு. க. சுப்பிரமணியம். 11 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

பத்திரிகைச் செய்திப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்: செல்வன் சி. சிவசுந்தரலிங்கம், செல்வன் ச. குகவரதராசா.

செயலாளர் திரு.க. சுப்பையா, தனதிகாரி திரு. க. மார்க்கண்டு.




நீங்கள் அறியவேண்டியதோர் இரகசியம் பொஸ்

BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்

நீடியகால சேவையையும், சிக்கன சமையலையும் அளிப்பதற்கென தயாரிக்கப்பட்டன்வ.

சமையல் அடுப்பு — 27U — 2 பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள், 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 37U — 3 பர்னர்கள்

போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகை போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 20U — 2 பர்னர்கள்

மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ளது. சமைப்பதற்கென வசதியான மேற்புற இடவசதியுண்டு. போர்ஸலேன் மேற்புறம் கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும், பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு



பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு CWE ஸி.டப்ளியூ.ஈ. 60, மக்கலம் ரோட். ஸி. டப்ளியூ. ஈ. கடைகள் மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்கள்

CWE HW

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

முருகன் — நவா — ஓடியன் — ராஜா
(ஜிந்துப்பிட்டி) (கொம்பனித்தெரு) (கண்டி) (யாழ்ப்பாணம்)



★ இலட்சியநடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன்,
★ ஆர். விஜயகுமாரி, ★ எம். ஆர். ராதா,
★ அசோகன் மற்றும்பலர் நடித்த

ராஜேந்திரன் பிக்ஸர்ஸ்

முத்து மண்டபம்

முக்கிய குறிப்பு: தயவுசெய்து இந்தப்படத்தின் இறுதிக் கட்டங்களிலுள்ள மர்மங்களை யாரிடமும் சொல்லவேண்டாம்.



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கிங்ஸ்லி (கொழும்பு) — [illegible] (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) — ராஜ் (நீர்கொழும்பு) — வெம்பிளி (கண்டி)
ஸ்ரீகிருஷ்ண (திருக்கோணமலை) — மொடர்ன் (பதுளை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்

★ நாட்டுக்குத் தேவையான நல்ல கதை!
★ குடிப்பது ஒன்றே வாழ்வு என்று எண்ணுபவர்களுக்கு நல்ல பாடம்!!



சிவாஜி கணேசன், பத்மினி, ராகினி, தங்கவேலு, டி. ஆர் ராமச்சந்திரன், பி.கண்ணாம்பா, சுந்தரிபாய், எம். ஆர். சந்தானம், பக்கிரிசாமி, புளிமூட்டை ராமசாமி, காலஞ்சென்ற சாயிராம் மற்றும் பலர் நடித்த

புனர்ஜென்மம்

பின்னணி:
சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ராஜா, திருச்சி லோகநாதன், ஜிக்கி, சுசீலா, ஜானகி, சரஸ்வதி

திரைக்கதை-வசனம் ஸ்ரீதர் — டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி — இசை டி.சலபதிராவ்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன். – பி சரோஜா தேவி
நடித்த
கைராசி


## எதிரிக்கு விடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலத்தைப் பதிவு செய்ய வில்லை. அங்கே நின்ற சனங்களைப் பார்த்து வைத்தியை யார் வெட்டியது என்று வீரபாகு கேட்டார். நான் நடந்ததை அப்போது சொன்னேன்.

எதிரியின் பிரதம வழக்கறிஞர் திரு. சரவணமுத்து நன்னித்தம்பியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழக்: பலாலி-யாழ்ப்பாணம் வீதி நேர் வீதிதானே?

சாட்சி: ஆம்.

வழக்: போக்குவரத்து அதிகமுள்ள வீதி?

சாட்சி: ஆம்.

வழக்: சம்பவம் நடைபெற்ற இடத்திற்குப் பக்கத்தில் ஒரு வீடு இருக்கிறது?

சாட்சி. தெரியாது.

வழக்: ஒரு பலசரக்குக் கடை இருக்கிறது?

சாட்சி: ஆம்.

வழக்: அந்தக் கடையில் பலர் இருந்தார்கள்?

சாட்சி: நான் கவனிக்கவில்லை,

வழக: உமது மாமன் குத்தப்பட்டதும் நீர் அழுதீரா? குளறினீரா?

சாட்சி: நான் குளறவில்லை அவர் குறினார்.

வழக்: உடையார் வீடு அருகேதானே இருக்கிறது?

சாட்சி: தெரியாது.

வழக்: உரும்பிராய் சந்தியில் விதானையார் வீடு இருக்கிறது?

சாட்சி: தெரியாது.

வழச்: அவ்விடத்தில் 300 பள்ளர் குடும்பங்கள் இருக்கிறது?

சாட்சி: ஆம்.

வழக்: அவர்கள் உமக்குச் சொந்தக்காரர்களா?

சாட்சி: இல்லை.

வழக்: உமது இனத்தைச் சேர்ந்தவர்களா?

சாட்சி: ஆம்.

வழக்: அவர்களுக்கு நடந்ததைச் சொன்னீரா?

சாட்சி: இல்லை.

வழக். கடையிலிருந்தவர்கக்குச் சொன்னீரா?

சாட்சி: இல்லை.

வழக்: சம்பவம் நடந்தபோது நீர் கடையில் வேலை செய்து கொண்டிருந்தீர்?

சாட்சி: அன்று நான் வேலைக்குப் போகவில்லை.

வழக்: சாட்சிகள் இல்லாதபடியால் உமது சொந்தக்காரர்கள் உம்மைத் தயார் செய்தார்கள்?

சாட்சி: நான் கண்டதைச் சொன்னேன்.

சாட்சியம் அளித்தபோது நன்னித்தம்பியை நீதியரசர் பலமுறை எச்சரிக்கை செய்தார். சட்டவைத்தியர் வேலும்மயிலும், சார்ஜண்ட் வீரபாகு, ஞானப்பிரகாசம் ஆகியோர் சாட்சியமளித்தார்கள். நீதியரசர் சாட்சியமளித்த ஞானப்பிரகாசத்தை எச்சரித்து இனிமேல் இப்படியான பொய்ச் சாட்சியம் கூறவேண்டாம் என்று கூறினர்.

## அமெரிக்க தகவல் கிரகம்

கேப்கனவரால் பெப். 14

3-வது தகவல் தொடர்பு செயற்கைக் கிரகம் ஒன்றை அமெரிக்கா வெற்றிகரமாக அனுப்பியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. டெலிபோன், டெலிடைப் கருவிகள்மூலம் இதனுடன் தொடர்புகொள்ள முடியும்.

## புதிய மரண விசாரணை அதிகாரி

கோப்பாய், வியாழன்

வழக்கறிஞர் திரு. ஏ. தனபாலசிங்கம் உரும்பிராய் பகுதிக்கு திடீர் மரணவிசாரணை அதிகாரியாக நீதியமைச்சரால் நியமனஞ் செய்யப்பட்டுள்ளார்.

# தாத்தாரின் சடலம் தகனம் செய்யப்பட்டது

## மறைந்தமந்திரிக்கு தலைவர்கள் அனுதாபம்

புதுடில்லி, பெப. 14

நேற்றுப் பிற்பகல் காலமான இந்திய உள்நாட்டு உதவி மந்திரி திரு. பி. என். தாத்தாரின் சடலம் இன்று காலை 11 மணிக்கு ஜமுனைக்கரையில் தகனம் செய்யப்பட்டது.

திரு. தாத்தரின் சடலம் திறந்தவண்டியில் வீதிவழியாக வந்துகொண்டிருந்தது. அவரது சடலத்தின் மேல் இந்திய தேசியக்கொடி போடப்பட்டிருந்தது.

தகனக்கிரியையின் போது உள்துறை மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி உட்பட பல உதவி மந்திரிகளும் எம். பி.க்களும், பிரமுகர்களும் வந்திருந்தனர்.

பாரதப் பிரதமர் நேரு ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன், உப ராஷ்டிரபதி திரு. ஸாகிர் ஹுசைன், மற்றும் பல மந்திரிகள் திரு. தாத்தாரின் இல்லத்துக்குச் சென்று அவரது சடலம் மீது மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். வெளிநாட்டுப் பிரமுகர்கள், எம். பிக்கள் ஆகியோரும் காலஞ்சென்ற தலைவரின் வீட்டுக்குச் சென்று மரியாதை செலுத்தினர்.

திரு. தாத்தாரின் மறைவுக்கு மரியாதை செலுத்தும் முகமாக இன்று அரசாங்கக் கட்டடங்களில் எல்லாம் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறந்தன.

கட்சித் தலைவர்கள் பலர் தங்களது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளனர்.

## கிரீஸ் மன்னர்

கல்கத்தா, பெப். 14

இந்தியாவில் 12 நாடுகள் சுற்றுப்பிரயாணம் செய்தபின், கிரீஸ் மன்னர் தம்பதிகள் இன்று கல்கத்தாவிலிருந்து பாங்காக் புறப்பட்டனர். புறப்படுமுன் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அவர் அனுப்பிய செய்தியில் தமக்கு அளிக்கப்பட்ட விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

## யாழ்ப்பாணத்தில் செக். ராஜதந்திரி

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையிலுள்ள செக்கோசிலோவேக்கிய பதில் ஸ்தானிகர் திரு. வி. பி. ஸ்டென்போவ நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இவர் சுமார் ஐந்து தினங்கள் இங்கு தங்கியிருக்கும்போது யாழ்ப்பாணப் பகுதியில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பார்வையிடுவார். இன்று பிற்பகல் ஐந்து மணியளவில் 'ஈழநாடு' காரியாலயத்திற்கு அவர் விஜயம் செய்திருந்தார்.

இன்று வெள்ளிக்கிழமை காரைநகருக்குச் சென்று அங்குள்ள கடற்படைத் தளத்தையும், யாழ்ப்பாணம் நூதனசாலை, நல்லூர்க் கந்தசுவாமி கோவில், பண்ணை கடற்கரைக்கும் சென்று பார்வையிடுவார். சனிக்கிழமை யாழ்ப்பாணம் கோட்டையைப் பார்ப்பதுடன் யாழ்ப்பாண நகரத்தையும் சுற்றிப் பார்வையிடுவார். அன்றையதினம் பலாலி விமான நிலையத்திற்கும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கும் இவர் விஜயம் செய்யவிருக்கிறார், அன்று சாவகச்சேரியில் "சோவியத் பாடசாலை ஒன்று" என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார். இரவு ஏழு மணிக்கு பருத்தித்துறையில் நடைபெறும் பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொள்வார். 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும், காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கும், காங்கேசன்துறை வெளிச்சவீட்டையும் இவர் பார்வையிடுவார். அன்று இரவு ஏழு மணிக்கு குரும்பசிட்டி கிராமமுன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும்பொதுக் கூட்டமொன்றில் பங்குபற்றுவார். 18-ந் திகதி இவர் கொழும்புக்குப் பயணமாவார்

# தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி

## ஈராக் புரட்சி காரணமாம்

கொழும்பு, வியாழன்

ஈராக்கில் அண்மையில் ஏற்பட்ட புரட்சியால் இலங்கைத் தேயிலை விற்பனவு பாதிக்கப் பட்டுள்ளது. புரட்சிமூலம் முன்னைநாள் ஈராக் பிரதமர் கொலை செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஏற்பட்ட புதிய அரசியல் சூழ்நிலையால் இலங்கைத் தேயிலை விற்பனவு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள வங்கிகள் ஈராக்கின் புதிய அரசியல் சூழ்நிலையைத் தொடர்ந்து அவ்விடத்திற்கான வங்கிக் கணக்குகள் எதையும் செய்யவில்லை என்றும் இதனால் இவ்வாரத்தில் ஈராக்கிற்கு தேயிலைஏற்றுமதிசெய்ய முடியவில்லை என்றும் தேயிலை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் தேயிலை ஏலவிற்பனையில் இலங்கைக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் என்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். ஈராக்கிற்கு வங்கிக் கணக்குகள் திறக்கப்படாமல் இருப்பதால் தேயிலையை ஏற்றுமதி செய்து பணத்தை பெற முடியாமலிருப்பதாலேயே இவ்விதம் தேயிலை ஏற்றுமதி தடைப்பட்டுள்ளது.

அண்மையில் நிகழ்ந்த புரட்சிக்கு முன்னர் இலங்கையிடமிருந்து தேயிலை வாங்கும் மத்திய கிழக்கு நாடுகளில் ஈராக் முதலிடம் வகித்துவந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். வங்கிகள் தொடர்ந்து இவ்விதம் செய்யுமானால் தேயிலை ஏற்றுமதி பெரிதும் பாதிக்கப்படும். சீன இந்திய எல்லைச்சண்டை ஏற்பட்டதும் இலங்கையின் தேயிலைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டது. ஆனால் ஈராக்கில் ஏற்பட்ட சதியைத் தொடர்ந்து உருவாகிய அரசியல் சூழ்நிலையால் தேயிலை ஏற்றுமதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. புரட்சியை தொடர்ந்து ஏற்பட்ட மாறுதல்களால் புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கம் வழக்கமான வேலைகளைக் கவனிப்பதற்கு எவ்வளவு நாட்கள் செல்லும் என்பதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டுபெப்வரி மாதம் 15-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.